Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11252)

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-10 22-02-2005 வெவ்வாய்க்கிழமை ஓசை 04

## அம்பாறை தம்பட்டைத்திடலில் தற்காலிகக் குடியிருப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்துவைப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பட்டைத்திடலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டிமுடிக்கப்பட்ட தற்காலிக வீட்டுத்திட்ட திறப்புவிழா வைபவம் நேற்றுக் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து வீட்டுத்திட்டத்தை அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் மாணிக்கவாசகம் அவர்கள் திறந்து வைத்தார்.

கடந்த 26.12.2004 அன்று சுனாமிப்பேரலை அனர்த்தம் காரணமாக அனைத்தையும் இழந்து தவித்த மக்களின் எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முகமாகவும், அவர்களுக்கான பொருத்தமான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்கும் முகமாகவும் அம்பாறை மாவட்டத்தில் 08 இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துவருகின்றது. அந்த வகையில் தம்பட்டைத்திடலில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தினை மக்களுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் சாள்சின் சிறில.விஜயம்; நிகழ்ச்சி நிரல் தயாரிப்பில் முரண்பாடு

பிரித்தானிய இளவரசர் சாள்சின் சிறிலங்கா விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளார். இந்த விஜயத்தின்போது கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கு அவர் ஆர்வம் கொண்டிருக்கின்றார்.

இதற்கமைய பிரித்தானிய தூதரகம் நிகழ்ச்சி நிரலை தயாரித்து வருகின்ற போதிலும் சிறிலங்கா அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

# மாணவன் மீதான பொலிசாரின் கொடூரத்தை கண்டித்து மன்னாரில் மௌனப் பேரணி

## சனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

**மன்னார் தாழ்வுப் பாட்டுப் பகுதியில் மாணவன் ஒருவன் தாழ்வுப்பாட்டுப் பொலிஸ் உத்தியோகத்தரால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டத்தைக் கண்டித்து நேற்று மன்னாரில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. இதன் இறுதியில் சனாதிபதி சந்திரிகாவிற்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட நீதிமன்றம் முன் பாடசாலை மாணவ மாணவிகள், மீனவர்கள், மன்னார் மக்கள் ஆகியோரை ஒன்றிணைத்து மௌன ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் அரச செயலகம் முன்பாக வந்தடைந்தது இப்பேரணி இத்துர்நடத்தையில் ஈடுபட்ட பொலிசாருக்கு அதிக பட்சமான தண்டனை வழங்கக்கோரி நடாத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பேரணி மன்னார் அரச செயலகத்தை வந்தடைந்து அரசாங்க அதிபர் அவர்களின் பிரதிநிதியிடம் இப்பேரணிக்கான மகஜர் கையளிக்கப்படும் முன் வாழ்வோதய உத்தியோகஸ் தர் அந்தோனிமுத்து அவர்களால் வாசிக்கப்பட்டு வெகுஜன அமைபபுக்களின் தலைவர் சிந் தாத்துரை அவர்களால் அரசாங்க அதிபரின் பிரதி நிதியிடம் கைய ளிக்கப்பட்டது. இம் மகஜரைக் கையேற்ற பிரதிநிதி இதற்கு உரியநடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாணவிகள், மாணவர்களின் கருத்துக்கள் செய்தியாளர்களால் பதியப்பட்டது. இதில் பலமாணவிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் மீது பாலியல் பலாத்காரம்; பொலிசார் அடையாளம் காணப்பட்டார்

மன்னாரில் தாழ்வுப்பாட்டில் இளைஞன் மீது பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

மன்னார் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற அடையாள அணி வகுப்பில், பாதிக்கப்பட்ட இளைஞர் சம்பந்தப்பட்ட பொலிசாரை அடையாளம் காட்டியுள்ளார்.

இதனையடுத்து மேற்படி பொலிசாரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (18)

## மாத்தறை மாவட்டத்தைப் பார்வையிட்டபின் அமெ.முன்னாள் சனாதிபதிகள் இலங்கையிலிருந்து புறப்பட்டனர்

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதிகளான பில்கிளிங்டன், ஜோஜ்புஷ் ஆகியோர் நேற்றையதினம் இலங்கையின் தென்பகுதிக்குச்சென்று பார்வையிட்டு விட்டு நேற்றுப் பிற் பகல் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் கைக்குண்டுவீச்சு மூவர் பலி; 36 பேர் காயம்; 33 கைதிகள் தப்பிஓட்டம்

### பாதாள உலகக்குழுவினர் கைவரிசை

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கைக்குண்டுவீச்சு சம்பவத்தின் போது சிறைக்காவலர் உட்பட மூவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 36 பேர் காயமடைந்து இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 19 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் சிறைக்காவலர்கள், பொதுமக்கள், கைதிகள் என பல்வேறு தரப்பினரும் அடங்குகின்றனர். இந்த சம்பவத்தின் போர்து 33 கைதிகள் தப்பியோடியுள்ளனர். இவர்களில் 19 கைதிகள் பாதாள உலகக் குழு உட்பட பல் வேறு பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மாத்தறை மாவட்டம் தங்காலை சிறைச்சாலையிலிருந்து குறிப்பிட்ட கைதிகள் வாகனமொன்றில் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு இறக்கி அழைத்துச் செல்லப்பட்ட சமயம் பாதாள உலகக் குழு கைதிகளை தப்பிச் செல்ல வைப்பதற்காக கைக்குண்டொன்று வெடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைக்காக கொண்டு செல்லப்படும் சந்தேக நபர்களை தடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)



## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 175 வீடுகளை அமைத்து வழங்க ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம் முன்வந்தது

சுனாமியால் பாதிக்கப்பட்ட வட-கிழக்க தமிழர் தாயகப் பகுதிகளில் 175 வீடுகளைக் கட்டித்தருவதாக ஆசிய பிராந்திய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் மனிபால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்த மனிபால் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்களுடனான சந்திப்பின் பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள விளையாட்டுத்துறை செயலகத்தில் பாப்பா அவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேலையாள் தேவை

அரிசி அரைக்கும் ஆலைக்கு நன்கு அனுபவமுள்ள வேலை யாள் தேவை அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசி தீர்க்கப்படும், விரும்பியவர்கள் நேரில் சந்திக்கவும். அரிசி அரை க்கும் ஆலை மாத்தளன் வீதி புதுக்குடியிருப்பு. (5739)

### வீடு விற்பனைக்கு

பரந்தன்- முல்லை வீதியில் புதுக்குடியிருப்பிலிருந்து 7 KM தொலைவில், தேவிபுரம் சந்திக் கண்மையில் ஒரு ஏக்கர் காணியில் கட்டுக்கிணற்றுடன் கூடிய 3 அறை வீடொன்று விற் பனைக்குள்ளது தொடர்புகட்கு 2227586. (5737)

### தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை யும் திருமணப்பதிவு பத்திரமும் மாவீரர் துயிலும் இல்லத்திற்கும் கிளிநகருக்கும் இடையில் தவறி உள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக் கவும்.நாகநாதி-இராசதுரை, உருத் திரபுரம் வடக்கு, சக்திபுரம்.(5486)

### தவறிவிட்டது

அருணாசலம் சின்னத்துரை உடையார் கட்டு காளிகோயிலடி யைச் சேர்ந்தவருடைய காணி போமிட்டும், தேசிய அடையாள அட்டை இரண்டுடன் நேற்று புதுக் குடியிருப்பு பிரதேச செயல கத்திற்கும் சுந்தைக்குமிமையில் கடதாசிஉறையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரதேச செயலகம் புதுக்குடியிருப்பில் ஒப் படைக்கவும். தகவல் அ.சின்னத் துரை. (5740)

### உழவு இயந்திரம் விற்பனைக்கு

உழவுக்கு பாவிக்காத 135 மசி பேக்குசன் 37-9271, புதிய பெட்டி யுடன் விற்பனைக்குண்டு. தொடர் புகளுக்கு:-ந.திருச்செல்வம், 3 ஆம் வட்டாரம், ஐயனார் கோவி லடி, முள்ளிவளை,முல்லைத் தீவு. (5733)

# உடைந்த கடற்றொழில் உபகரணங்கள் முல்லையில் திருத்திக் கொடுக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

சுனாமியினால் முல்லைத் தீவில் மணலில் புதையுண் டிருந்திருந்த கடற்றொழில் இயந் திரங்களையும், உடைந்த படகு களையும் திருத்திக் கொடுக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தின் ஆதரவில் லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி உதவியுடன் தமிழ் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தினால் இலவசமாக திருத்தி வழங்கப் பட்டு வருகின்றன.

இதுவரை அறுபது இயந்திரங் களும், பதினைந்து படகுகளும் திருத்தி வழங்கப்பட்டுள்ளன. மீன வர்களின் அன்றாட வாழ்கை நிலையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே நிறுவனம் இந்த இலவசத்திருத்த வேலையினை செய்து வருவதாக தமிழ் தகவல் தொழில் நுட்ப நிறு வனத்தினர் தெரிவித்தனர். (20)

# ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் நவீன தொழில் நுட்ப செயன்முறை

யு.என்.டி.பி நிறுவனமும் பொருண்மிய மதியுரையகமும் இணைந்து சர்வதேச நாடுகள் எங்கும் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப உத்திகளை நடாத்திக் காண்பிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிகழ்வு இன்றும் நாளையும் வட்டக்கச்சியிலுள்ள தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் இடம் பெறவுள்ளது. இந்த அரிய வாய்ப்பிணை பயன்படுத்தி இந்த செய்முறையினை முழுமையாகவும் தெளிவாகவும் பார்வையிட்டு பயன்பெறுமாறுவிவசாயிகளையும் ஆர்வலர்களையும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

# வட்டுவாகல் ஆற்றில் தொழிலுக்கு பழைய நடைமுறை இன்றுமுதல் அமுல்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல், கேப்பாப்புலவு ஆறுகளில் இறால், மீன்பிடிக்கும் மீனவர்கள் சுனாமிக்கு முன்பு எவ்வாறு நடைமுறை இருந்ததோ அவற்றை கடைப்பிடிக்குமாறு முல்லை மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் அ.மரியராசா கேட்டுள்ளார். கடந்த காலங்களைப் போன்றே படுப்புவலை, குல்லா, கட்டுமரம் ஆகியவற்றில் சென்று மீன் பிடிப்பது, வலைகளை கட்டிவிட்டு மீன் பிடிப்பது என்பன முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. வீச்சு வலை பாவித்து இறால், மீன்களை பிடிக்க முடியும். குல்லா, மரம், வலை என்பன ஆற்றங்கரையில் இருந்து பிடிபட்டால் முற்றாக அவை அழிக்கப்படுவதுடன் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந் நடைமுறை இன்று தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (20)

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of jaffna will entertain application from suitably qualified persons up to 04.03.2005 for the under mentioned posts.

**Faculty of arts**

1.Assistant Lecturer (on contract) in Education

Applicants those who wish to apply for the above post should have the following requirements

i. BA (with Economics/ Hindu Culture) with Master of Education

ii. Proficiency in English to conduct leturers in English Medium

iii. Minimum one year experience in teaching in the University Level and should have Information Technology skills.

2. Assistant Lecturer (on Contract) in English Literature

3. Visiting Lecturer in Home Economics. Perferable Fields for Visiting Lecturer .

i.Fundamental of Design& Interior Design

ii. Health Psychology.

iii. Guidance & Counselling.

4. Visiting Lecturer in Vocal/Miruthangam/ Veena/Violin

5.Instructor grade III in Dance(Miruthangam/ Vocal)

**Sports Science Unit**

Visiting Lecturer in PhysicalEducation for

Social Aspects of Physical Education

Badminton

Table Tennis.

Visiting Instructor in Physical Education for

Volley ball

| Post | Salary |
|---|---|
| Assiatant Lecturer (on contract) | Rs.14550/- p.m fixed |
| Instructor Grade III | Rs. 13,955-6x260-15,515/-p.m |
| Rate of payment for Visiting Lecturer | Rs.500/-per hour for lecture<br>Rs.200/- per hour for practicals |
| Rate of payment for Visiting Instructor | Rs.250/-per hour for practicals |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments either in person or by post, on a payment of Rs.20/- per form Those who wish to obtain application forms by post are requesested to send a Money Oder/ Postal Oder drawn in favour of the **Bursar,University of Jaffna** together with a **self- addressed stamped envelope** 23x10 c.m in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms**

Applicants from the University system/Government Departments/ Corporations and statutory Board should channel their applications through the Heads of respective Institutions Applications received after the closing date will be rejected without intimation

**VICE- CHANCLLOR**

## மீண்டும் புதுப்பொலிவுடன் மயில் புடவை மாளிகை — ஆரம்பம் —

கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் முற்று முழுதாக பொருட்கள் எல்லாம் அழிந்த போதும் மீண்டும் புதுப்பொலிவுடன் 24.02.2005 வியாழக்கிழமை பழைய இடத்தில் மயில் புடவை மாளிகை ஆரம்ப மாகின்றது என உரிமையாளர் ஆனந்தன் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் களுக்கு அறியத்தருகின்றார்.

(சி.11448)

## முல்லை வர்த்தக சங்க — அறிவித்தல் —

முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தின் பகுதிக்குள் தொழில்/ வாணிபம் செய்து வந்த அனைத்து உரிமையாளர்கட்கும் பணியாளர்கட்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று 24.02.2005 அன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மின்சாரசபை நிலையத்துக்கு முன்பாக நடைபெற இருப்பதால் சகலதொழில்/வாணிப உரிமையாளர் களையும் பணியாளர்களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டதற்காக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல ஆவணங்களையும் எடுத்துவருமாறும் கேட்கப்படுகிறீர்கள்.

தகவல்:- பி.மனோ,
வர்த்தகசங்க செயலாளர்,
முல்லைத்தீவு.

(சி.11449)

இங்கே வெட்டவும்




கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தால் நடாத்தப்பட்ட நெஸ்பிறே பரிசுப்போட்டியின் மூன்றாவது அதிஸ்டசாலி நேற்று திங்கட்கிழமை தெரிவுசெய்யப்பட்டார்.

அதிஸ்டசாலியின் பெயர் விபரம்
சி.அருளானந்தம்
மிதிலை
2ஆம் யூனிட், முரசுமோட்டை

பரிசுக்குரியவர் கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தில் நேரில் வந்து உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி தனது ஏசியா ஈருருளியினைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி-11266)

**தினமும் நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!**

அதன் மேல்ப்பகுதியை வெட்டி அனுப்புவதன் மூலம் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளர் ஆகுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: நெஸ்பிறே பரிசுப்போட்டி ஈழநாதம், யாழ்சாலை, கிளிநொச்சி.

**அம்மன் களஞ்சியம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077



நெஸ்பிறே பரிசுப்போட்டியின் மூன்றாவது அதிஸ்டசாலி சிறுவர் ஒருவரால் தெரிவுசெய்யப்படுவதை படத்தில் காணலாம்.

# காஸாவிலிருந்து இஸ்ரேலியரை வெளியேற்ற இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம்

### யூலையில் ஆரம்பிக்கும் பணி 8 வாரங்களில் முடிவடையும்

(டெல் அவிவ்)

**பலஸ்தீனத்துடனான பிரச்சினைக்கு தீர்வு காணும் முக்கிய நடவடிக்கையாக காஸாப் பகுதியில் குடியிருக்கும் இஸ்ரேலிய மக்களை வெளியேற்றுவதற்கான இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்திற்கு அந்நாட்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

பலஸ்தீனத்தின் காஸா மற்றும் மேற்குக் கரையின் வடக்குப் பகுதிகளை இஸ்ரேலியப் படையினர் ஆக்கிரமித்ததையடுத்து அங்கு இஸ்ரேலியர்கள் குடிய மர்த்தப் பட்டனர்.இதன் காரணமாக இஸ்ரே லியர்களுக்கும் பலஸ் தீனியர் களுக்கும் பல ஆண்டு களாக மோதல் நீடித்து வந்தது இந்தப்பிரச் சினைக்கு தீர்வு காணும் நடவடிக் கையாக ஆக்கிரமிப்புப் பகுதி களிலுள்ள தங்கள் நாட்டு மக்களை அங்கிருந்து வெளியேற்றி வேறு இடங்களில் குடியமர்த்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷ ரோன் திட்டமிட்டிருந்தார் அதன் பின்னர் இஸ்ரேலிய அமைச்சரவை இத்திட்டத்திற்கு நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவையின் இந்த ஒப்பு தலையடுத்து காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதிகளில் சுமார் ஒன் பதாயிரம் யூதக்குடியிருப்பாளர் களை வெளியேற்றும் நடவடிக் கைகள் எதிர்வரும் யூலை மாதம் தொடங்கவுள்ளதாகவும் இது எட்டு வாரங்களில் முடிவடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் இஸ்ரேலின் அமைதி மற்றும் பொருளாதாரம் என்பன மேம்படும் என இஸ்ரே லியப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள் ளார்.

யசீர் அரபாத்தின் மனைவிற்குப் பின்னர் பலஸ்தீன சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மகமூத் அப்பாஸ் இஸ்ரேலுடனான நீண்ட காலப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் நடவடிக்கையிலீடுபட்டுள்ளார்

இதற்கேற்ப இம்மாத ஆரம்பத்தில் எகிப்தில் நடைபெற்ற இஸ்ரேல்- பலஸ்தீன உச்சி மாநாட் டில் எட்டப்பட்ட சண்டை நிறுத்தத் திற்கு மானத்தை இரு தரப்பினரும் நடைமுறைப்படுத்தத் 'தொடங் கியுள்ளனர்.

இதன்படி பலஸ்தீனத்தின் காசாப்பகுதியிலுள்ள இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்களை அகற்ற இஸ் ரேலிய அமைச்சரவை நேற்று முன் தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய சிறைகளிலுள்ள எட்டாயிரம் பலஸ்தீன கைதிகளில் முதலக் கட்டமாக தொளாயிரம் பேரை விடுவிக்க இஸ்ரேல் ஒப்புக் கொண் டுள்ளது. இவர்களில் ஐநூறு பேரை இஸ்ரேல் நேற்று விடுவித் துள்ளது.



**இரண்டு வருடங்களுக்கு முன் மேற்குக் கரையிலிருந்து காசாவுக்கு இடம் பெயர்ந்த பலஸ்தீனர்கள் மீண்டும் மேற்குக் கரைக்கு செல்லும் போது ஊடகவியலாளர் களுக்கு கையசைக்கின்றனர்.**

## பாக்தாத்தில் இரு குண்டு வெடிப்புக்கள் அமெ.வீரர் உட்பட 10 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் இரு வேறு இடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பத்துப் பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நாள் தோறும் நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் பாக்தாத் நகரின் வடக்குப்பகுதி மற்றும் அல்-அன்பர் ஆகிய இடங்களில் குண்டுகள் வெடித்தன. இந்த சம்பவத்தில் அமெரிக்க வீரர் ஒருவரும் ஈராக் பொலிசார் ஐந்து பேர் உட்பட பத்துப் பேர் பலியாகியுள்ளனர்.

## போலித் திருமண ஊர்வலம் நடத்தி பொலிசார் மீது மாவோயிஸ்டுகள் தாக்குதல்


(காத்மாண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்டு கள் போலியாக திருமண ஊர்வலம் ஏற்பாடு செய்து பொலி சார் மீது தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு பொலிஸ் அதிகாரி இறந்தார். 5 பேர் காயமடைந்தனர்.

காத்மாண்டின் தென் கிழக்கே 300 கி.மீ தொலைவிலுள்ள மகேந் திர நகரில் கடந்த சனிக்கிழமை இந்த சம்பவம் நடந்தது. இந்த போலித் திருமண ஊர்வலத்தில் 300 மாவோ தீவிரவாதிகள் பங்கேற்ற னர். அந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் சாவடியை நெருங்கியதும் அதன் மீது தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்து 30 நிமிடம் பொலி சாருடன் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் தீவிரவாதிகளும் இறந்திருப்பர் என்று கூறப்படு கிறது இதே வேளை நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் மேற்கொண்டுவரும் சாலை முற்றுகைப்போர் 8 ஆம் நாளாக நேற்று முன்தினமும் நீடித்தது.

இந்தப் போராட்டத்தால் நாட்டின் பல நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. ஏராளமானோர் வேறு இடங்களுக்கு செல்லமுடி யாமல் தத்தளிக்கின்றனர். சரக்குப் போக்குவரத்து முடங்கி அத்தியா வசியப் பண்டங்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டு அவற்றின் விலை வாசி கிடுகிடுவென உயர்ந்த படியுள்ளது. கடந்த ஒருவாரத்தில் காய்கறிகளின் விலை இருமடங் காக உயர்ந்து விட்டது. காத் மாண்டை இணைக்கும் நெடுஞ் சாலைகளில் ஆங்காங்கே தடை களை வைத்து போக்கு வரத்து தடை செய்து வருகின்றனர் மாவோ தீவிரவாதிகள்.

சாலை முற்றுகைப்போர் காரணமாக நேபாளத்தின் பல்வேறு மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் தலை நகர் காத்மாண்டில் பாதிப்பு ஓரளவுக்கே உள்ளது. இந்தியா வில் அரசு அதிகாரிகளுடன் ஆலோ சனை நடத்திய நேபாளத்துக்கான இந்தியத் தூதர் சிவ சங்கர முகர்ஜி ஞாயிற்றுக்கிழமை காத்மாண்டு திரும்பினார். நேபாளத்தில் சனநா யகம் மீண்டும் திரும்ப வேண்டி யது அவசியம் என்பதை வலியுறுத் தி இந்தியா தந்துள்ள கடிதத்தை மன்னர் ஞானேந்திராவிடம் முகர்ஜி ஒப்படைப்பார். முன்னதாக நேபா ளம் செல்லும் முன் டில்லியில் நிருபர் களிடம் பேசிய முகர்ஜி நேபாள நிலைமையை இந்தியா உன்னிப் பாக கவனித்து வருவதாகக் குறிப்பிட் டார்.




**மியன்மார் பிரதமர் மணிலா வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப்புச் சுலோகங்களை ஏந்தியபடி செல்லும் ஆர்ப்பாட்டக்காரர்**

### 14 பாரஊர்திகளுக்கு தீ வைப்பு

(காத்மாண்டு)

நேபாளத்தில் அரசுக்கு எதிராக மாவோயிஸ்டு தீவிரவா திகள் போராடி வருகிறார்கள் ஜோதிமாரா என்ற இடத்தில் தீவிரவாதிகள் நேற்று முன் தினம் திடீர் தாக்குதல் நடத்தி னார்கள் வீதிகளில் சென்ற14 பாரஊர்திகளை நிறுத்தி தீ வைத்தார்கள் இந்த பாரஊர் திகளில் ஒன்றில் 58 மாடுகள் ஏற்றப்பட்டு இருந்தன தீ வைத்த தால் அந்த மாடுகளும் பாரஊர் தியோடு எரிந்து கருகி உயிரிழந் துள்ளன.



**டாக்காவில் நடைபெற்ற படகு விபத் தில் பலியான ஒருவரின் உடல் மீட் புப் படை யினரால் மீட்கப்பட் டபோது........**

## வெனிசுலாவில் பாதிரியார் உடையில் சிக்கிய போதைவஸ்த்து கடத்தல்காரன்

பாதிரியார் போன்று உடை அணிந்தபடி போதைவஸ்த்தைக் கடத்த முற்பட்டவர் வெனி சுலா விமான நிலையத்தில் அதிகாரிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

வெனிசுலா நாட்டிலுள்ள மைகுடியா விமான நிலையத்திலிருந்து ஸ்பெயின் நாட்டுக்குச் செல்ல பயணி ஒருவர் காத்திருந்தார் 67 வயது மதிக்கத்தக்க அவர் கத்தோலிக்க பாதிரியார் உடை அணிந்திருந்தார் அவருடைய நடவடிக்கைகளில் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினார்கள். அந்த நபரிடம் 7.9 கிலோ எடையுள்ள போதை ஊசி மருந்துகள் மற்றும் 12 பொதி போதைப் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக் கப்பட்டு கைப்பற்றப்பட்டன . இதன் பேரில் அவரை கைது செய்து அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து பிடிபட்ட ஏஞ்சல் விலாங்கோ மீது கடத்தல் பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## விஷவாயு செலுத்தி 5 தீவிரவாதிகள் கொலை

ரஷ்யாவில் காக்கசஸ் பகுதிக் குடியிருப்பில் ஒளிந்திருந்த தீவிரவாதிகள் ஐந்து பேர் விஷ வாயு செலுத்தி இராணுத்தினரால் கொல்லப்பட்டனர்.

வடக்கு காக்கசஸ் பகுதியில் கபார்தினோ பல்காரியாவிலுள்ள நால்சிக் என்ற இடத் தில் ஐந்து தீவிரவாதிகள் ஒரு குடியிருப்பில் புகுந்து கொண்டனர். தகவலறிந்து அவ்விடத் திற்கு வந்த இராணுவத்தினர் குடியிருப்பை சுற்றி வளைத்து தீவிரவாதிகளை சரணடையும் படி எச்சரித்தனர். தீவிரவாதிகளிடமிருந்து எந்தப் பதிலும் வராததால் இராணுவத்தினர் அதிநவீன ஆயுதங்களை கொண்டு குடியிருப்பு மீது தாக்குதல் நடத்தினர். ஆனால் தீவிரவாதிகள் பணிவதாகத் தெரியவில்லை முன்னதாக அந்தக் குடியிருப்பில் இருந்தவர்கள். பாதுகாப்பாக வெளி யேற்றப்பட்டனர் பின்னர் அந்த குடியிருப்புக்குள் விஷவாயுவை செலுத்தி ஐந்து தீவிரவாதி களையும் இராணுவத்தினர் கொன்றனர். கடந்த வாரம் இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூன்று தீவிரவாதிகளை ரஷ்ய இராணுவத்தினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

# எமது கிராம அபிவிருத்திக்கு உழைக்கின்றோமென்ற உணர்வு மக்கள் மத்தியில் உருவாக வேண்டும்

(முறிகண்டி)

**எமது கிராம அபிவிருத்திக்கு நாங்கள் உழைக்கின்றோம் என்ற உணர்வு மக்கள் மத்தியில் உருவாக வேண்டும். இவ்வாறு நியாப் திட்ட உதவிப் பணிப்பாளர் சிவபாலன் தெரிவித்தார்.**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் நியாப்-IIதிட்ட மையக் கிராமமாகத் திருமுறிகண்டிக் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்ட அறிமுக விழா திருமுறிகண்டி கிராமத்தின் றெட்பானா மண்டபத்தில் நியாப் திட்ட உதவிப் பணிப்பாளர் சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

திருமுறிகண்டிக் குளம் புனரமைத்தல் - கிராமத்திற்கான நான்கு பிரதான பாதைகள் திருத்தி அமைத்தல், பொது மண்டபம் அமைத்தல் பெண்களுக்கான சுய முயற்சி சுழற்சிக் கடன் வழங்கல் என்னும் நான்கு அம்சங்கள் இதில் அடங்குமென திட்ட உதவிப் பணிப்பாளர் சிவபாலன் விளக்கமளித்தார்.நியாப் -II திட்ட வெற்றிக்கு மக்கள் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிகமிக முக்கியம் எனக் கூறிய அவர் மக்கள் சிரமதான பங்களிப்பு சிறிய சம்பளத்துடன் வேலைத் திட்டங்களில் பங்கு பற்றி உதவுவது அதிமுக்கிய அம்சமாகுமென்றார். இது எமது கிராமம். எமது கிராம அபிவிருத்திக்கு நாங்கள் உழைக்கின்றோமென்ற உந்துதல் மக்கள் மனதில் எழ வேண்டும்மென்றும் கூறினார். இந் நிகழ்வில் கிராம சேவையாளர், பொறியியலாளர் தொழில் நுட்ப வியலாளர் தமிழர் புனர் வாழ்வுக் கழக பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (07)

# கிராமிய அபிவிருத்தி வங்கி 183 பேருக்கு கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

மக்களின் நிதிப்பற்றாக் குறையை நீக்கும் முகமாகவும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்குடன் மக்களிற்கான கடன் வழங்களை கிராமிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் இவ்வருடம் சனவரி மாதத்தில் 183 பேருக்கு 36 இலட்சத்து 29ஆயிரத்து 830 ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2004/2005 காலபோக நெற்செய்கை கடனாக 106 பயனாளிகளுக்கு9 இலட்சத்து 19 ஆயிரத்து 955 ரூபாவும், சுயதொழில் கடனாக 53 பயனாளிகளுக்கு12 இலட்சத்து 87 ஆயிரத்து500 ரூபாவும், தொழிற்துறை மேம்பாட்டுக் கடனாக எட்டுப் பயனாளிகளுக்கு 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் ஏனைய கடன்களாக 16 பயனாளிகளுக்கு மூன்று இலட்சத்து 92 ஆயிரத்து 375 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன்கள் இவ்வருடம் கிராமிய அபிவிருத்தி வங்கி கிளைகளால் வழங்கப்பட்டவை என கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (15)

### வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் 26.02.2005 அன்று மாலை 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தருமாறு அறிவிக்கப்பெற்று மற்றும் புதிய நிர் வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (12)

# வவுனியாவில் சாரணிய தந்தை பேடன்பவல் பிரபு தினம்

(வவுனியா)

சாரணிய தந்தை பேடன் பவல் பிரபுவின் தினம் வவுனியாவில் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் 148 ஆவது பேடன் பவல் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தலைவரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமாகிய க.சீனிவாசகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரசஅதிபரும், வவுனியா மாவட்ட சாரணர் சங்க போசகருமாகிய சி.சண்முகமும் சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட சாரணர் சங்க உதவி மாவட்ட ஆணையர் செ.சிவகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட சாரண ஆசிரியர்களும், மாணவர்களுமாக பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## நில அளவையாளர் நியமனம்



முல்லை.மாவட்ட அரச நில அளவையாளராக கனகையா

அழகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அரபுநாட்டில் தனது துறையில் அனுபவங்களைப் பெற்று பின் இங்கிலாந்து சென்று அங்கும் தனது துறையில் அனுபவங்களைப் பெற்று சொந்த நாட்டுக்குத் திரும்பி சென்ற வருடம் அனுராதபுர மாவட்டத்தில் கடமையாற்றி தற்போது நிரந்தரமாக முல்லை மாவட்டத்திற்கு 12.2.2005 இல் இருந்து நில அளவைக் கடமைககாக நியமிக்கப்பட்டுள்ளார். (08,20)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியை இயல்புநிலைக்குக் கொண்டுவர முயற்சி

## –ஜி. ரி. இசட், யுனிசெப் கூட்டு நடவடிக்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மாணவரின் கல்வியை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான கூட்டுமுயற்சியை ஜேர்மன் அரசாங்கத்தின் (ஜி.ரி.இசட்) ஜேர்மன் தொழில் நுட்ப அமைப்பும், யுனிசெப் அமைப்பும் ஆரம்பித்துள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு வியாழக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

டிசம்பர் 26 கடற்கோளின் போது நிலாவெளி தமிழ் மகாவித்தியாலய மாணவர்களில் 32 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டுத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் 95 பாடசாலைகளைச் சேர்ந்த 21,500 மாணவருக்கு கற்றலுக்கான உபகரணங்களும் கற்பித்தலுக்குரிய பொருள்களும் வழங்கப்படும். யுனிசெப் 12500 மாணவருக்கும ஜி.ரிஇசட், 9000 மாணவர்களும் இவற்றை வழங்குகின்றன. ஜி.ரி.இசட் பாடசாலைப்பைகள், சீருடைத்துணிகள் வழங்கியுள்ளது. யுனிசெப் கற்பித்தல் உபகரணங்களை வழங்குகின்றது.

95 பாடசாலைகளுக்கு கற்பித்தலுக்குரிய பொருள்கள் அடங்கிய 204பெட்டிகளை யுனிசெப் வழங்கியுள்ளது. இந்நிகழ்வில் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், யுனிசெப் திருமலைப் பிரதிநிதி கபிரியெல்லா எல்றோய், ஜி.ரி.இசட் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் ஜெர் ஹார்ட்ஹக், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.திலகரத்தினம், மாகாணக் கல்வித்திணைக்களத் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.வரதசீலன், நிலாவெளி தமிழ் ம.வி. அதிபர் மதியழகன் ஆகியோர் பங்குபற்றினர். யுனிசெப் ஜி.ரி.இசட் ஆகிய அமைப்புக்கள் கல்வித்துறை வளர்ச்சிக்கு ஆற்றும் சேவைகளைச் செயலாளர் தியாகலிங்கம் பாராட்டினார். டாக்டர் ஹக், கபிரியெல்லா எல்றோய் ஆகியோரும் பேசினர். (25)

### வர்த்தக சங்க நிர்வாக கூட்டம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி வர்த்தக சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிய ளவில் வர்த்தக சங்கத் தலைவர் சந்திரராசா தலை மையில் இடம் பெற்றது.

இவ் வர்த்தக நிர்வாகக் கூட்டத்தில் புதிய திட்டங்கள் சில வகுக்கப்பட்டது. வட்டக்கச்சி சந்தைப் பகுதியில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரண்டு கடைகள் திறக்கப்படும் எனவும் அதை மீறி திறப்பவர்களுக்கு குற்றப் பணம் அறவிடப்படும் எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந் நிகழ்விற்குப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளரும் கலந்து கொண்டார் (12)

~வவுனியா தெற்கு கல்வி வலயத்தில்~

# 16 ஆண்டுகளாக அதி கஷ்டப் பிரதேச பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியைக்கு இடமாற்றம் மறுப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 16 ஆண்டுகளாக அதிகஷ்டப் பிரதேச பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியைக்கு இடமாற்றம் வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பெரியதம்பனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 13.06.1988 ஆம் ஆண்டுமுதல் நியமனம் பெற்று கடமை யாற்றி வரும் திருமதி யோகேஸ்வரி - சாம்பசிவம் என்ற ஆசிரியை கடந்த மூன்று வருடங்களாக இடமாற்றம் கோரி வருகின்றார். வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான நெளுக்குளத்தில் வசித்து வரும் இவர் இராணுவக் கட்டுப்பாடற்ற பெரியதம்பனைக்கு தினமும் போக்கு வரத்து செய்வதிலுள்ள கஷ்டங்களை எடுத்துக் கூறி கடந்த மூன்று வருடங்களாக வவுனியா தெற்கு கல்வி வலயக் கல்வி அதிகாரிகளிடம் இடமாற்றம் வழங்குமாறு கோரி வருகின்றார். எனினும் தனக்கு 2005ஆம் ஆண்டில் கூட இடமாற்றம் வழங்கப்பட வில்லை என அவ் ஆசிரியை தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் நகர் பிரதேச பாடசாலைகளில் தொடர்ச்சியாக எட்டு வருடங்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்குவதென வவுனியா தெற்கு கல்வி வலய இடமாற்றச் சபை தீர்மானித்து, இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காதவர்களுமாக 160 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளது.

இந் நிலையில் மிகக் கஷ்டப் பிரதேசமான பெரிய தம்பனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தொடர்ச்சியாக 16 ஆண்டுகளாக கடமையாற்றி வரும் இவ் ஆசிரியை கடந்த 3 ஆண்டுகளாக இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தும் இடமாற்றம் வழங்கப்படாமை ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (10)

### பணிமனை இயங்குகிறது

மல்லாவி பிரதேசத்தில் தமிழீழ சுகாதார சேவையினரின் பணிமனை கடந்த 12.02.05 தொடக்கம் அரசியல்துறை செயலகத்தில் இயங்கி வருகின்றது என பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்தார். (24)

# மக்கள் வங்கிக் கிளையை பரந்தனில் இயங்க வைக்க கோரல்

(உடையார்கட்டு)

பரந்தன் பகுதியில் மக்கள் வங்கிக் கிளையை மீள் குடியேறிய மக்களின் தேவைக்காக அவசரமாகத் திறக்கவேண்டுமென கண்டாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அத்தியாவசிய கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு முன்பு பரந்தன் பகுதியில் இயங்கி வந்த பரந்தன் மக்கள் வங்கிக்கிளை மீண்டும் அப் பகுதியில் திறக்கப்பட வேண்டுமென மீள் குடியேறிய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு முன்னர் இப் பகுதியில் இயங்கி வந்த கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கக் கிளையையும் மீண்டும் அப் பகுதியில் திறக்க வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளதாகவும், இதுவும் அவசரமாக அப் பகுதியில் திறக்க வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். என அவர் மேலும் தெரிவித்தார். (46)

# நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் அவசிய தேவை!

நிரந்தர வைத்தியர் இன்மையால் நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை நீண்ட நாட்களாக பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகின்றது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக் கையின் பின் விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் நடவடிக்கையில் நெடுங்கேணி மீட்கப்பட்ட காலப் பகுதியிலிருந்து இன்று வரை நிரந்தரமான ஒரு வைத்தியர் இன்றியே செயற்பட்டு வரு கின்றது.

நெடுங்கேணி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கென இருக்கின்ற ஏதோ ஒரு வைத்தியசாலை இதுவாகும். ஆனால் இங்கு இது வரை நிரந்தர வைத்தியர் இல்லை.

மேலும் இங்கு ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, மகப் பேற்று விடுதி என இருக்கின்ற போதிலும் அங்கு தங்கிநிற்கும் நோயாளர்களை பராமரிக்க இருப்பது தாதிமார் மூன்று பேர் மட்டுமேயாகும். இதனால் மேற்படி வைத்தியசாலை பாரிய நெருக்க டிகளை சந்தித்து வருகின்றது. நிரந்தர வைத்தியர்கள் இவ் வருடம் சேவையில் இருப்பார் என கூறப்பட்ட போதும் இதுவரை அவ் வைத்தியர் சேவைக்கு வரவில்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மூன்றாண்டுகளாகியும் நிறைவு செய்யப்படவில்லை

## தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

(தீவகம்)

**யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இன்றுடன் மூன்றுஆண்டுகளை நிறைவு செய்யும் வேளை எதற்காக இவ்வொப்பந்தம் ஏற்பட்டதோ அது இது வரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சுடுகலன்களின் சத்தங்கள் நின்றனவேதவிர வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை இவ்வொப்பந்தத்தினால் ஏற்படவில்லை என தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்நிலைமை தோன்றாமைக்கு உண்மையான காரணம் தென்னிலங்கையின் இனத்துவேச அரசியல் பாகுபாடே ஆகும். இதனால் நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் நின்றுபோயின. அது மாத்திரமல்ல அரசினால் பல்வேறு யுத்த நிறுத்த மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் பலரின் உயிர்கள் இக் காலப் பகுதியில் காவு கொள்ளப்பட்டன. இவற்றையெல்லாம் தமிழ் மக்களாகிய நாமும் எங்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளும் பொறுமை காத்து சமாதானம் என்ற இலக்கு நோக்கியே சென் றோம். ஆனால் இது வரை எமக்கு எதுவும் கிட்டவில்லை. இதனை எமது தேசியத் தலைவர் அவர்கள் தெட்டத் தெளிவாக கடந்த வருடம் நடைபெற்ற மாவீரர் தின உரையில் சமாதானத்தின் விளிம்புக்குச் சென் றுள்ளதை சர்வதேச சமூகத்திற்கும் தென்னிலங்கைக்கும் கூறியுள்ளார்.

பொறுமைக்கும் எல்லையுண்டு. இவ்வேளையில் தான் வடக்குக் கிழக்கு மக்கள் சுயகௌரவத்துடனும் தன்மானத்துடனும் வாழ வேண்டுமானால் தங்களுக்கென தனியானதொரு கட்டமைப்பு வேண்டும். இது சமஷ்டியை ஒத்ததாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். இவற்றையொல்லாம் தென்னிலங்கை அரசு ஏற்றுக் கொண்டதாகவோ புரிந்து கொண்டதாகவோ, தெரியவில்லை, இதுபற்றி நோர்வேத் தரப்பிற்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி எமது பகுதியை உள்ளடக்கிய இலங்கையின் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி ஆழிப் பேரலையினால் மக்கள் தமது உயிர் உடமை வீடு வாசல் உறவுகள் எல்லாவற்றை யும் பத்தே நிமிடங்களில் இழந்தனர் இந்தக் கால கட்டத்தில் எமது தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களை காப்பாற்றும் முயற்சியிலும் அவர்களை பராமரிக்கும் முயற்சியிலும் எவ்வித பேதமுமின்றி செயற்பட்டனர். இதனை சர்வதேச சமுகமும், தென்னிலங்கை அரசும் கண்டு வியந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் பாராட்டப்பட்டனர். அது மாத்திரமில்லாமல் மக்களின் மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். இவ்வேளையில் சிறிலங்கா அரசு வடக்கு - கிழக்கு மக்களுக்கு பாரபட்சம் காட்டி நிற்கின்றது. இதுவரை எங்களிற்கு அரசின் எந்த உதவியும் சம அளவில் கிடைக்கவில்லை இங்கு மாற்றாந்தாய் மனப்பான்மையையே தெளிவாக காட்டியுள்ளது. இது சர்வதேச சமுகம் உட்பட அனைத்து பிரிவினருக்கும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை புலிகள் மீளக் கட்டியெழுப்புவதற்கு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் முன்மொழிந்தனர். இதனை ஏற்றுக்கொள்வதாக அரசுஇல்லை இவ்வாறே எல்லாவற்றையும் அரசு வேண்டு மென்றே பின்னடித்துச் செல்கின்றது. இது சர்வதேச சமூகத்திற்கு விளங்கப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் தான் சமாதானம் மீள் கட்டுமானம் இவற்றையும் தாண்டி கிழக்குப் பகுதியின் மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நாட்டுப்பற்றாளருமான சந்திரநேரு உட்பட ஐந்து பேர் வெலிகந்தப் பகுதியில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் ஆகும். தமிழ் மக்களையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் சீண்டி விட்ட செயலாகும் இதனை சர்வதேசமும் கண்டித்துள்ளது. இது திட்டமிட்ட ஒரு சதிச் செயல் என்பதில் இரு வேறுகருத்திற்கு இடமில்லை. இதனை தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாக கண்டிப்பதுடன் இனிப் பொறுத்தது போதும் பொங்கி எழுவோம். தன்மானம் மிக்க தமிழ் இனம் இதை ஏற்றுக் கொள்ளாது போராட்டத்தில் இறங்கும். பொறுமை கொள்ளாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்திற்கும், இலங்கைக்கான நோர்வே தூதுவருக்கும் இலங் கைக்கான அமெரிக்க தூதுவருக் கும் அனுப்பி வைக்கப்பட்டது. (36)

## வீதிப்பிரச்சினை தீர்த்து வைப்பு

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சத்தியபுரம் கிராமத்திற்கு செல்வதற்கான வீதி அமைப்பது தொடர்பான பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. இரு குழுக்களுக்கிடையே இவ் வீதி அமைப்பது தொடர்பாக நிலவி வந்த பகையை உடுவில் பிரதேச அரசியல் துறையினரின் தலையிட்டால தீர்க்கப்பட்டது. (41)

## வீடு புகுந்து திருடமுற்பட்டவர் பெண்களால் நையப்புடைப்பு

(தென்மராட்சி)

கோயிலாமனைக்கிராமத்தில் வீடுபுகுந்து கொள்ளையடிக்க முற்பட்ட திருடனை நடு இரவில் பெண்கள் ஒன்று சேர்ந்து அடித்து விரட்டியுள்ளனர். இவரு டன் வந்த இரண்டு திருடர்கள் தப்பியுள்ளனர். இக்கிராமத்தில் உள்ள ஐந்து வீடுகளில் ஒரே இரவில் கொள்ளையடிக்க முற்பட்டவேளையில் ஒரு வீட்டில் உள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து திருடன் ஒருவனைப்பிடித்து நையப்புடைத்தனர். ஒரே இரவில் வீடுகளில் கொள்ளையர்கள் புகுந்த சம்பவத்தால் இப்பகுதி மக்கள் கதிகலங்கிப் போயுள்ளதாக தெரியவருகிறது. கடந்த ஆண்டே இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி இருப்பதாக தெரியவருகிறது. (28)

## கலாச்சார மண்டபம் அமைக்க நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கலாச்சார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக் காலச்சார மண்டபம் சாவகச்சேரி வாரிவனநாதர் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதி மக்களின் நீண்டகால வேண்டுகோளைக் கவனத்தில் கொண்டு தென்மராட்சி கலை மாமன்றம் இதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (33)

## சாரதியின் கவனக்குறைவால் தவறிவிழுந்து மாணவி படுகாயம்

கொடிகாமம் பேருந்து நிலையத்தில் பேருந்தை விட்டு மாணவி இறங்கிய பொழுது மாணவி இறங்குவதை அவதானிக்காத பேருந்தின் சாரதி திடீரென பேருந்தை எடுத்ததால் மாணவி தவறி விழுந்து படுகாயமடைதுள்ளார்.

படுகாயம் அடைந்துள்ள மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (28)

## பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியுடன் பொது மண்டபங்களமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் அரசின் நிதி உதவியுடன் யாழ்.குடாநாடெங்கிலுமுள்ள அகதிமுகாம்களில் பொது மண்டபங்கள் அமைக்கப்பட வுள்ளன.

அந்தவகையில் வலிகாமம் பகுதியில் உள்ள 9 இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களிலும், தென்மராட்சியில் 5 இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும் முகாம்களிலும் தலா ஒவ்வொரு பொதுமண்டபம் வீதம் மொத்தம் 14 பொது மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக பிரான்ஸ் அரசு 46 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் மக்களுக்கான பொது நல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், மாணவர்களின் குழுக் கல்வியை ஊக்குவிப்பதற்காகவுமே இப் பொது மண்டபங்கள் அமைக் கப்படவுள்ளன. (33)

## கடலுணவுகளின் விலை மீண்டும் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடலு ணவுகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதால் நுகர்வோர் தமது நாளாந்த உணவுத்தேவைக்கான கடலுணவுகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்களையும் சந்தித்து வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தங்களுக்குப் பின்னர் யாழ்குடாநாட்டு மக்களில் 95 வீதமானோர் கடலுணவுகளைத் தமது உணவில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்து வந்தனர். இவ்வாறு சுகாதார நலன் கருதி கடலுணவைத் தவிர்த்து வந்த மக்கள், தற்போது மீண்டும் கடலு ணவுகளை உண்பதால் சுகாதாரப் பிரச்சினைகள் ஏதும் இல்லை என்ற அறிவிப்பைத் தொடர்ந்து தமது கடலுணவுப் பாவனையை அதிகரித்துள்ளனர்.

எனினும் சுனாமியால் ஏற்பட்ட உபகரண இழப்புக்களால் யாழ். குடா நாட்டு மீனவர்கள் இன்னமும் வழமையான தொழிலுக்குத் திரும்பத் தொடங்காமையால் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியளவு கடலுணவுகள் பிடிக்கப்படாமையால் கடலுணவின் விலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

இளவாலை வடக்கு வெண்புறா விளையாட்டுக்கழகத்தினரால் நீண்டகாலமாக இயங்காமல் இருந்த வெண்புறா சனசமூக நிலையம் மீண்டும் புத்துயிரூட்டப்பட்டு ஆக்கபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம் பெற்ற இந் நிகழ்வில் ஓய்வு பெற்ற ஆசிரியர் தி.சிவராஜன் அவர்கள் நாடாவை வெட்டி நிலையத்தினைத் திறந்து வைத்தார். (சு)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு "நிகொட்" 50 மில்லியன் ஒதுக்கீடு

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்வதற்கென நிகொட் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமான இவ்வைத்தியசாலையை புனரமைப்புச் செய்வதற்கு 311 மில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் இவ் 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வைத்திய சாலையில் 14 கட்டில்கள் கொண்ட புதிய வைத்திய விடுதி ஒன்றை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே நிதி உதவி செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

## கடற்றொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வில்லை!

### யாழ். மாவட்ட க.தொ.ச. சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்கள் காரணமாக யாழ்.மாவட்டத்திலுள்ள 14 கடற்றொழில் வலயங்களில் 9 கடற்றொழில் வலயங்களின் தொழில் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ் 9 கடற்றொழில் வலயங்களிலுமுள்ள மீன்பிடிவள்ளங்கள், வலைகள், படகுஇயந்திரங்கள் என்பன சேதங்களுக்குள்ளாகியிருக்கின்றன. எனினும் அரசாங்கம் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்த எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் பொருளாதார நிலைமை பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கசமாசங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (33)

## விஞ்ஞான பேச்சுப் போட்டி

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கடந்த காலங்களைப் போன்று இவ்வருடமும் மாணவர்களிற்கு இடையேயான விஞ்ஞான நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ளது.

இவ்வருடத்திற்கான விஞ்ஞானப் பேச்சுப்போட்டியானது நாளை புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற ஒழுங்கமைக் கப்பட்டுள்ளது.

போட்டியாளர்களின் அனுமதி அட்டைகள்யாவும் அந்தந்தப் பாடசாலை அதிபரினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அறிவித்துள்ளது.

# ஜே.வி.பியினரின் சவாலை சந்திரிகா பூச்சியமாக்குவாரா?

"தயா பத்திரனவை கொலை செய்தது ஜே.வி.பி யினரே என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இது நீண்டகாலமாக நன்கு திட்டமிடப்பட்டதின் விளைவே. அவரை எனக்குத் தெரியாது. மிகக்கொடூரமான மிலேச்சத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டிருப்பதை படங்களில் அவதானித்தேன். எனது எதிரியான ஜே.ஆர் கொலை செய்யப்படுவதை படங்களில் கூட நான் பார்க்கக் கூடாது என பிரார்த்திக்கின்றேன்."

இந்தக் கூற்று 1988 ஆம் ஆண்டு சனவரி 18 ஆம் திகதி "அத்த" (உண்மை) என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் விஜய குமாரணதுங்க குறிப்பிட்டதாகும். அவ்வாறு கூறி ஒரு மாதம் ஆகமுன்னரே அதாவது 88 பெப்ரவரி 16 ஆம் நாள் அவரும் காட்டு

காட்டிக்கொடுத்து விட்டார் என்றும், பதவி மோகம் கொண்டு கட்சி மாறி விட்டார் என்றும், எடுத்த உறுதியை மீறி விட்டார் என்றும் கூறியது. இதனைப் பொருட்படுத்தாது விஜயகுமாரணதுங்க சென்ற பாதையில் சென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மாற்றினார். அதுவே விஜயவுக்கு கிடைக்கும் பெரும் வெற்றியாகும் என கருதினார். இறுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சிறிலங்கா ஐக்கிய சங்கமாக மாற்றி அதிகாரத்துக்கு வந்து சமாதானத்தை ஏற்படுத்த முன்னின்றார். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ஐ.தே.கட்சியால் கூட அதற்கு எதிராக செயற்பட முடியவில்லை. ஆனால் ஜே.வி.பி மக்களைத் திரட்டி கிளர்ச்சி செய்தது.

ஆனால் ஜே.வி.பியின் அணுகு

யினரை சீண்ட ஆரம்பித்துள்ளார். அவர் இப்போது இந்த இனப்பிரச்சினையை தீர்க்க முயலும் போது ஆளும் கட்சிக்குள் இருப்போரே ஒரு சொல் தவறினாலும் அரசை விட்டு நீங்குவதாக கூறுகிறார்கள். வேண்டுமானால் (முடியுமானால்) விலகிப்போகட்டும் என்று தெரிவித்துள்ளார். ஜே.வி.பியை தந்திரமாக மடக்க முயன்றார். அது முடியாத போது அழிக்க முற்படுகிறார். ஜே.வி.பி.யின் சவாலை பூச்சியத்துக் குள்ளாக்க நினைக்கிறார். ஆனால் ஜே.வி.பி யினருக்கு மக்களிடம் இருக்கும் ஆதரவையும், செல்வாக்கையும் அவர் பரிகாசமாக நினைக்கிறார். அதனை ஒரு தரம் குறைந்த கட்சியாக எவ்வாறு கணிப்பது, அது ஒன்றில் ஆரம்பித்து 16 தொகுதிகளில் வென்ற கட்சி அது இந் நாட்டிலுள்ள மூன்றாவது பெரிய கட்சி. அன்றைய நாட்களில் கூட அது பெரும்

ஓரம் கட்டி விட்டு அரசுடன் இணைந்து என்ன கேட்டனர்? எமக்கு இவ்வளவு பெரிய பதவி வேண்டும் பிரதியமைச்சர்கள் பதவி வேண்டும் என்றெல்லாம் கேட்டனர். ஜே.வி.பி கேட்கவுமில்லை, தந்ததைப் பெற்றுக்கொள்ளவுமில்லை" என்றும் தெரிவித்தனர்.

இது அன்று ஜே.வி.பி வார்த்தைகளால் விடுத்த சவாலாகும் இன்று சந்திரிகா அவற்றைப் பூச்சியமாக்க நினைக்கிறார். ஆயினும் இன்று சந்திரிகாவுக்கு பயந்து ஜே.வி.பி மௌனமாகியிருக்கிறது. சந்திரிகா கட்சியை (கூட்டணியை) விட்டு விலகலாம் என்று கூறியதைக் கேள்விப்பட்டும் ஏன் ஜே.வி.பி முழந்தாளிட்டு நிற்கிறது. என்றும் சிலர் எண்ணலாம். முன்னைய இடது சாரிகளுக்கும் இவ்வாறு நேரிடவில்லையே என்றும் சிலர் நினைக்கலாம்.

சிறிமாவுடன் கூட்டுச்சேர்ந்த என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்டி.சில்வா ஆகியோருக்கும் இந்நிலையேற்படவில்லை. இரு பகுதியினரும் கௌரவத்துடன் பிரிந்தனர்.

ஆனால் ஜே.வி.பி அந்த கௌரவமான சவாலை இழந்தது எவ்வாறு? அது கூட்டணிக்குள் இருந்து கொண்டே

மிராண்டித்தனமாகக் கொலை செய்யப்பட்டார்.

அவரின் கொலைக்குப் பின்னர் அவரது மனைவி சந்திரிகா குமாரணதுங்க தனது கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் பத்திரிகையான "அச"(கண்) பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

"இளமை, துணிவு, பொதுநலம், ஒழுக்கம் என்பவற்றை ஒருங்கே கொண்டிருந்த விஜய குமாரணதுங்க ஏகாதிபத்தியத்துக்கும், சர்வ திகாரத்துக்கும் அச்சுறுத்தலாக இருந்தார். குறிப்பாக நாடு பிரிவதை தவிர்த்து சமாதானத்தை ஏற்படுத்த அவர் உறுதி பூண்டார். ஆனால் அமெரிக்கர்களின் கைக்கூலிகளான ஜே.வி.பி அவரை கொன்று விட்டது". அப்போது அவர் கூறியது உண்மையாக இருக்கலாம். காரணம் சமாதானத்துக்காக அவர் பாடுபட்டார். ஆனால் அவரை புலிகளின் முகவர் என அப்போது ஜே.வி.பி விமர்சித்தது.

இந்தச் சம்பவங்கள் நடந்து முடிந்து சரியாக 16 வருடங்களின் பின்னர் 2004 ஆம் ஆண்டு சந்திரிகா அதே ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து பொதுத் தேர்தலுக்குத் தயாரானார்.

அப்போது தனது கணவனைக் கொன்ற கொலையாளிகளுடன் கூட்டுச் சேரும் ஒரு மனைவி இருக்கிறாரா என ஐ.தே.க வினவியது மட்டுமல்ல முதலைக் கண்ணீரும் வடித்தது.

ஆயினும் விஜயகுமாரணதுங்கவின் இறுதிக்கிரியையன்று இரு கைகளையும் உயர்த்தி உறுதியொன்றை எடுத்தார். அந்த உறுதி வேறொன்றுமில்லை. தனது கணவன் சென்ற சமாதான வழியில் செல்வதென்ற உறுதியாகும்.

அதற்காக அவர் மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யுத்தவாத, இனவாதப் போக்கை மாற்றி விஜயவின் சமாதான வாதத்தை ஏற்படுத்த அவர் எண்ணினார். அதன் நோக்கமாகவே அக்கட்சியில் புகுந்தார்.

ஆயினும் இதனை சகிக்காத ஐ.தே.கட்சி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவை

முறையைத் தந்திரமாகக் கையாண்டு அவர்களின் மனதை மாற்ற சந்திரிகா முயன்றார். 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சந்திரிகாவின் பொது சன ஐக்கிய முன்னணிக்கு அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியாமல் போனதும் ஜே.வி. பியை இணைத்துக் கூட்டரசாங்கத்தை ஏற்படுத்தி சமாதானத்தை முன்னெடுக்க முயன்றார். அந்த வழியிலேயே அவர் ஐ.தே கூட்டணியரசை வென்றார். வென்றவுடன் ஜே.வி.பி.யினது சமாதான எதிர்ப்பை படிப்படியாகக் குறைக்க நினைத்தார். அதை ஐ.தே கட்சி எதிர்த்தது. விஜயகுமாரணதுங்கவை கொன்றவர்களுடன் சந்திரிகா கூட்டு வைக்கிறார் என்று குற்றம் சுமத்தியது. விஜய இன்று இருந் தால் பூமி வெடித்து விடும் என்றும் கூறியது.

ஆனால் சந்திரிகா கூறியதாவது விஜய முன்னெடுத்த சமாதானத்தை ஜே.வி.பி முன் னெடுக்க உதவுமானால் அது விஜயவுக்குக் கிடைக்கும் பெரும் வெற்றி என்பதாகும்.

அவ்வாறு கூறிக்கொண்டு 1994 சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தியது போன்று ஜே.வி.பியையும் பிளவுபடுத்த சந்திரிகா எண்ணினார். ஆனால் சந்திரிகாவின் சனாதிபதி பதவிக்காலம் முடிந்ததும் அக்கட்சி தலைமைத்துவம் இன்றித் தவிக்கும் போது அதன் தலைமைப் பொறுப்பை தான் ஏற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அதன் வால்பிடிக்கும் கட்சியாக மாற்ற ஜே.வி.பி திட்டமிட்டது.

இது சந்திரிகாவுக்கு விளங்கினாலும் பொறுமையாக அவர் இருந்தார். அவரை இப்போது குழப்பியது ஜே.வி.பி.யினரே. விஜயகுமாரணதுங்க புலிகளுக்கு இடைக் கால நிர்வாகத்தை வழங்கப்போகிறார் என குற்றஞ்சாட்டியது போன்றே சந்திரிகாவும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதியாகி விட்டார் என ஜே.வி.பி கூறிக்கொண்டு சந்திரிகாவை குழப்புகின்றது.

அதன் பின்னரேயே சந்திரிகா ஜே.வி.பி



சவாலை விட்டது.

அன்று பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் (1999.03.12) "பட்டிவீரக்கோன் இந்திக்க போன்ற இடது சாரிகளின் சிவப்புக்கொடி ஹொரகொல்ல வளவுகளில் திரைச்சீலையாக மாறிய கொடியல்ல. எமது கொடி" என்று தெரிவித்ததும் 2000.09.30 திகதி பேட்டியில் "இன்று அநேகமான கட்சிகளுக்கு உதிரிக் கட்சிகள் இருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய போது இணைக்கவும், வேண்டாத போது தூக்கி எறியவும் செய்கின்றன. பட்டி வீரக்கோன், மங்கள, அஷரப் போன்ற உதிரிகளும் இருக்கின்றன. கட்சி காற்றுப் போக ஆரம்பித்தவுடன் எங்களையும் உதிரிகளாக இணைத்துக்கொண்டனர். ஆனால் நாம் உதிரிகளாக இருக்க விரும்பமாட்டோம்." "நாம் யாருடையதும் வால்களாக மாட்டோம். எமது உறுப்பினர்கள் உயிர்த்தியாகம் செய்தது பெரும்பான்மை கட்சிகளுக்கு உதிரிகளாக வருவதற்கல்ல" என்றும் 2001.09.18 அன்று வழங்கிய பேட்டியில் "இதற்கு முன்பு அந்தந்தக் கட்சி பிரதிநிதிகள் ஆதரவளித்த மக்களின் மனித உரிமைகளை

சந்திரிகாவுக்கு எதிராக செயற்பட்டு மக்கள் முன் அவரைப் பற்றி விமர்சித்தமையினாலாகும். பிரச்சினைகளை உள்ளுக்குள்ளேயே பேசிக்கொண்டு தீர்க்காமல் சந்திகளில் சுத்தித்திரிய ஆரம்பித்தது. அதனால் தனது மதிப்பையும் முன்னர் விடுத்த சவாலையும் இது இழந்தது. அதனை மீளப்பெற முடியாது. ஆனால் முடியாமலுமில்லை. ஜே.வி.பிக்கு இந்த மதிப்பு கிடைத்தது. அவ்வுறுப்பினர்களின் உயிர்த்தியாகத்தினாலாகும். அத்துடன் ஒரு உணவுப் பொதிக்காக, சிறுபதவிக்காக அல்லது சுகபோகங்களுக்காக அவர்கள் கட்சியை

**உப்புல் ஜோசப் பர்ணாந்து [லங்காதீப] தமிழில்:~வடிவேல்**

வளர்க்கவில்லை. அவர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவித்தே அரசியலுக்குள் புகுந்தார்கள். அவர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவித்தே அரசியலுக்குள் புகுந்தார்கள்.

# மாவீரர் படிப்பக செயற்பாடுகளை மறுசீரமைக்க நடவடிக்கை

(உடையார்கட்டு)

மிகநீண்ட நாட்களாக மந்த நிலையிலேயே செயற்பட்டு வருகின்ற உடையார்கட்டு மாவீரர் படிப்பகத்தினை குறுகிய நாட்களிற்குள் மறுசீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவீரர் படிப்பக நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

படிப்பகம் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதுடன் தேவையான அளவு புத்தகங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. அங்கத்தவர் தொகை விரிவாக்கும் முயற்சியும் நடைபெறவுள்ளது.

கல்வி சார்ந்த, தொழில்சார்ந்த, ஏனைய சேவைசார்ந்த அனைத்து நிறுவனங்களையும் இணைத்து படிப்பகத்தின் வளர்ச்சி தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (19)

# கணனி அன்பளிப்பு

(மல்லாவி)

யோகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவனும் தற்போது ஜேர்மனியில் வசித்து வருவபவருமான சித்தி விநாயகம் தனிப் பெரும்கருணா (கண்ணா) என்பவர் அண்மையில் ரூபா 72,000 பெறுமதியான கணினியை அன்பளிப்பு செய்துள்ளார். இது யோகபுரம் மகாவித்தியாலய அதிபர் திருமதி க.கிருஷணபிள்ளையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. , (24)

# முருகானந்தா மகாவித்தியாலயத்தில் வீதி ஒழுங்கு கருத்தமர்வு

முரசுமோட்டையில் முருகானந்தா மகாவித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை முதல்வர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நட்ாதப்பட்டது. இதில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர். சி. சிவகுமாரன் கலந்து கொண்டு வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

இதில் பாதசாரிகள் வீதியில் நடந்து செல்லும் போது எவ்வாறு செல்ல வேண்டும். துவிச்சக்கர வண்டி ஓட்டிகள், சாரதிகள் அனைவரும் வீதி ஒழுங்கிற்கு அமைவாக வீதியில் எவ்வாறு சாரத்தியம் செய்ய வேண்டும். விபத்தைத் தடுக்கும் வகையில் எவ்வாறு சாரத தியம் செய்யலாம் என்பது தொடர்பான விரிவான கருத்துக்களை வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் 15 ஆசிரியர்களும், 200 பேர் வரையான மாணவர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் இக் கலந்துரையாடலில் ஏ-9 வீதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும், நடைபெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப்படங்களும் காண்பிக்கப்பட்டது.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## புதிய பலம் பீற்றர்சன்

இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற 7 போட்டிளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. டெஸ்ட் தொடரை 2க்கு 1 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றினாலும் ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்கா 4-1 என்ற கணக்கில் இங்கிலாந்தை துடைத்துவிட்டது.

கடந்த 2003ஆம் ஆண்டில் தென்னாபிரிக்க நகரங்களில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பாரிய தோல்வியை சந்தித்த பின்னர் தென்னாபிரிக்க அணி பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றி இதுவாகும். அதற்கு பங்களித்தவர்கள் வரிசையில் அணித் தலைவர் கிரஹேம் ஸ்மித்தும், ஹர்ஷல் கிப்ஸ் ஆகியோர் முதலிடம் வகிக்கின்றனர். முதல் தடவையாக 4ஆவது வரிசை ஆட்டக்காரராக களமிறங்கிய கிப்ஸ் இரு சதங்களைப் பெற்றதுடன் ஸ்மித்தும் இரு சதங்களைப் பெற்றனர். ஷோன் பொலக், நற்றினி நில் ஆகியோர் பந்து வீச்சில் திறமை காட்டினார். இம் மூவரும் தொடர் நாயகன் விருதைப் பெற அண்மித்தனர். எனினும் அவர்களைப் பின் தள்ளி விட்டு தொடர் நாயகன் விருது இங்கிலாந்து அணி வீரர் கெவின் பீற்றர்சனை சென்றடைந்தது.

விருது அவரைச் சென்றடையக் காரணம் அவரிடம் இருந்து வெளியான திறமையாகும் இவர் மேற்குறிப்பிட்ட வெற்றி அணியின் அனுபவ வீரர்களை விட தோல்வி கண்ட அணியின் அனுபவம் குறைந்த வீரராவர்.

இவர் அனுபவம் குறைந்த வீரர் ஆயினும் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களை துரத்தித் துரத்தி அடித்தமைக்கு விசேட காரணம் தன்னை ஆரம்பத்தில் அணியில் இணைத்துக் கொள்ளாமையாகும்.

இங்கிலாந்து அணியின் சகல துறை வீரர் அன்ரூ பிளின்டொப் காயம் காரணமாக ஓய்வெடுத்ததால் அந்த இடத்தை நிரப்பவே இவர் வந்தார். அவர் அணியில் இடம் பெற்றிருந்தனால். இவருடைய திறமை வெளிப்பட்டிருக்க முடியாது.

தென்னாபிரிக்காவுடனான 6 போட்டிகளில் அவர் மூன்றில் சதமடித்தார். 430 பந்துகளை சந்தித்து 456 ஓட்டங்களை அவர் பெற்றார். இவர் பங்கு கொண்ட சிம்பாப்வேக்கு எதிரான முதல் போட்டியில் 27 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் அடுத்த போட்டியில் 77 ஓட்டங்களைப்பெற்றார்.

தென்னாபிரிக்காவை தாயகமாகக் கொண்ட அவர் உள்ளூர் அணியான வோசலு நேட்டல் அணிக்காக அறிமுகமானார். அப்போது சுழற் பந்து வீச்சாளராகவே அதிகம் பேசப்பட்டார். போதிய வாய்ப்பு கிடைக்காததால் இங்கிலாந்தின் கவுண்டி அணியான நொட்டிசி ஹாம்ஸையருக்கு மாறினார். பின்னர் அவர் இங்கிலாந்து அணிக்காக சர்வதேச போட்டி வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். பீற்றர்சன் தென்னாபிரிக்காவுக்கு எதிராக அவர் முதலாவது சதம் (108) கடந்த 2ஆம் திகதியாகும். அந்த வகையில் அவர் பிளின்டொப் இல்லாத குறையைப் போக்கினார். எனினும் பீற்றர்சன் என்ற திறமை மிக்க வீரர் ஒருவர் இருப்பது அதுவரை யாரும் அறியவில்லை.




அதன் பின்னர் உள்ளூரில் நடைபெற்ற கவுண்டி போட்டி ஒன்றிலும் அவர் 69 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 11 போட்டிகளில் பங்கு பற்றி அவர் பெற்றிருக்கும் ஓட்ட சராசரி 139.50 ஆகும்.

இந்தத் திறமையின் மூலம் எதிர்காலத்தில் அவர் அணியில் சிறப்பான இடத்தைப் பிடிக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவ்வாறாயின் எதிர்வரும் ஆஸஸ் தொடரில் கிரிக்கெட்டின் பிறப்பிடமான லோட்ஸில் உலகின் பிரபல அணியான அவுஸ்திரேலியாவை எதிர்த்து ஆடும்போது அது உறுதி செய்யப்படும். அத் தொடரில் இவரை உறுதி செய்யும் நோக்கில் சிறிலங்கா வரவுள்ள இங்கிலாந்து 'ஏ' அணியில் இருந்து இவர் நீக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கடமையில் கண்ணாயிரு...

அண்மையில் தென்னாபிரிக்காவில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது கிரிக்கெட் ஆட்ட நடுவர்களான ஸ்ரீவ் பகனர், சலிம் டார் ஆகியோருக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதையடுத்து முழு கிரிக்கெட் உலகமே அதிர்ந்து போனது. அவர்களுக்கு விடுக்கப்படும் இவ்வாறான மிரட்டல்கள் தீவிரமானால் கிரிக்கெட் ஆட்டம் பாதாள உலகின் ஆணைக்குட்பட வேண்டி வரலாம்.



மேற்படி மிரட்டல்கள் அண்மையில் செஞ்சூரியன் அரங்கில் இங்கிலாந்து, தென்னாபிரிக்க நாடுகள் பங்கு கொண்ட இறுதி டெஸ்ட் போட்டியின் போதாகும். இந்தக் கொலை மிரட்டல் நேரடியாக அவர்களுக்கு விடுக்கப்படாமல் நிர்வாக அதிகாரிகள் மூலமே பெறப்பட்டது. அதாவது அவர்களிடம் நடுவர்களை கொலை செய்யப் போவதாக கிடைத்த செய்தியாகும் இதனால் அவர்களிருவரும் கடும் பாதுகாப்புடன் அவர்கள் தங்கியிருந்த நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாகிஸ்தானிய நடுவர் சலிம் டார் உடன் நாடு திரும்பினார். ஒரு நாள் போட்டிகளில் பணியாற்ற பக்னர் அங்கு தங்கியிருக்க வேண்டியதாயிற்று

அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போது பணியின் போது பல குறைகளையும் அவமானங்களையும் சந்திப்பது உண்மை எனினும் இவ்வாறான ஒரு கொலை மிரட்டலை சந்திக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு பொலிசார் விசாரணை மேற்கொண்டபோது எவரும் கைது செய்யப்படவில்லை. பக்னர் மேலும் கூறும் போது ஜமேக்காவல் உதைபந்தாட்டப் போட்டிகளின் போது மத்தியஸ்தராக பணியாற்றிய அனுபவம் நிறைய இருப்பதாகவும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனினும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப் படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

விளையாட்டுக்களின் மதிப்பு கருதி எவ்வாறாயினும் இது போன்ற சம்பவங்களை முளையிலேயே கிள்ளி விடுதலன்றி கோடரியால் தறிக்கும் நிலையை தவிர்க்க வேண்டும்.

— வடிவேல் —

## அண்ணன் வழியில்....



டென்னிஸ் போட்டிகளுக்கு என்று தனியான தொழிற்சாலை வைத்துத் தயாரிக்கின்றார்களோ, என்னமோ! புதிது, புதிதாக ரஷ்யாவில் இருந்து நிறைய இளம் பெண்கள் வந்து கொண்டே.... இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் தான் சபினா வயது 18 தான் ஆனால் குழந்தை முகம் தோற்றத்தை வைத்துக்குறைத்து மதிப்பிட்டால் தொலைந்தது. களத்தில் இறங்கினால் பாய்ந்து, பாய்ந்து அடிக்கிறார். கடந்தவாரம் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் பங்கேற்றார்.

முதல் சுற்றில் இருந்தே பிரகாசித்த சபினா எதிர்பார்த்தது போலவே இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அங்குதான் ஆச்சரியம். பரபரப்பான இறுதிப்போட்டியில் சபினாவைச் சந்தித்தவர் அனுபவ வீராங்கனை அமீலிமவுரீஸ்மோ, பிரான்ஸ் வீராங்கனை என்பதால் அரங்கில் கூடியிருந்த ரசிகப்பெருமக்கள் அமீலிக்கு அமோக ஆதரவு வழங்கினர். அவர்கள் ஆதரவு மட்டும் வெற்றிக்குப் போதுமா? தூள் கிளப்பிவிட்டார் சபினா. பரிஸ் ஓபனின் சம்பியனானார். சபினா இதன் பின்னர் தான் இவர் யார் என்ற விடயம் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. சமீபத்தில் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற மாரட்சபின்....... அவரது குட்டித்தங்கையாம். சபின் நிறைய நுட்பங்களைச் சொல்லித்தருவாராம். சிறுவயதில் சபின், சபினா இருவருக்கும் அவர்கள் அம்மா தான் டென்னிஸ் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கொஞ்ச நாள் முன்பு வரை அம்மா துணை இல்லாமல் சபினா வெளியில் தலைகாட்டமாட்டார். இப்போ கொஞ்சம் தைரியம் வந்து தானாகவே புறப்படுகிறார். ஆனால் ஒவ்வொரு போட்டி முடிந்ததும் அம்மாவுடன் தொலைபேசியில்பேசிவிடுவாராம்."அவுஸ்திரேலிய ஓபன் தொடர் இரண்டாவது சுற்றில் பரிதாபமாகத் தோற்று விட்டேன். அந்தப் போட்டி முடிந்ததும் அண்ணன் சபின் ரொம்பக்கோபப்பட்டான். 'உனக்கு மன உறுதியோ, போராடும் துணிச்சலோ கொஞ்சம்கூட இல்லையே? என்று கோபமாகக் கேட்டான் அவனுக்குச் சரியான பதில் சொல்ல இப்போது வாய்ப்புக்கிடைத்து விட்டது என்கிறார் சபின்.

## தொடரும் சோதனைகள்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாள், டெஸ்ட் தொடர்களில் பங்கேற்க பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்திய மண்ணில் வரும் 28ஆம் திகதி கால் பதிக்கிறது.

இதற்கிடையில் தொடரை கைப்பற்ற போவது எந்த அணி என்ற ரசிகர்களின் கருத்துக்களும் பலம், பலவீனம் என்பது தொடர்பான விமர்சனங்களும் நாளுக்கு நாள் பத்திரிகைகளையும், வானொலிகளையும், உபகண்டத்தையும் ஆக்கிரமித்துள்ளன.



இந்த நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பல சர்ச்சைகளுக்கு மத்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அணித் தலைவராக தொடர்ந்தும் இன்சமாம் உல்-ஹக் நீடிக்கின்றார். துணைத் தலைவராக யூசுப் யுஹானா நீக்கப்பட்டு யூனிஸ்கானுக்கு அவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது அவ் அணியில் மீண்டும் ஒரு சிக்கல் நிலையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், யுஹானா ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக உள்ளதுடன் தொடர்ந்தும் பிரகாசித்து வருவதுடன் அணித் தலைவர் இல்லாதவிடத்து அணியை வழிநடத்தும் அனுபவம் கொண்டவராகவும் திகழ்ந்தவர். இப்படிப்பட்ட ஒரு வீரரை துணைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கியமை அவர் தொடர்பில பல மட்டங்களிலும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இது யுஹானாவுக்கு அணித் தலைவர் பதவிக்கான வாய்ப்பு இனி இல்லை என்பதை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அத்துடன் இந்திய சுற்றுலாவுடன் இன்சமாமின் அணித் தலைவர் பதவி பெரும்பாலும் முடிவுக்கு வரும் என்பதையும் சூசகமாக அறிவிப்பது போன்றதோ? அன்றி யுஹானா கிறிஸ்தவர் என்ற நிலையில் ஓரம் கட்டப்பட்டாரா என்ற கருத்துக்கள் வலுப்பெறுவது தவிர்க்க முடியாததே.

இந்த நிலையில், அணியிலிருந்து அக்தர் விலகல் மற்றும் யுஹானா புறக்கணிப்பு என்பன இந்தியாவுக்கு எதிரான போட்டி ஆரோக்கியமானதாக அமையுமா? என்பதில் கேள்வியை எழுப்பியுள்ளது. மொத்தத்தில் அதிக அனுபவமற்ற இளம் வீரர்களைக் கொண்டு களமிறங்கப் போகும் பாகிஸ்தான் அணி இந்திய மண்ணில் இந்திய அணியை சமாளிக்குமா என்ற கருத்து வலுப் பெற்றுள்ளது.

இதற்கு மேலாக இப்போட்டித் தொடரில் இந்திய அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என முன்னாள் கிரிக்கெட் வீரர்களினதும், கிரிக்கெட் வல்லுநர்களினதும் கருத்தும், பாகிஸ்தான் அணியில் ஏற்பட்டுள்ள குழப்பமும் அவ் அணியை மேலும் சங்கடமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

இவை பாகிஸ்தான் அணியில் நீண்டகாலமாக இடம்பெறும் ஒன்றுதான். ஆயினும் முக்கியமான தொடர் ஒன்று நடைபெறும் காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளமைதான் அணியை பொறுத்து வேதனைக்குரியதாக அமைந்துள்ளது. இது பாகிஸ்தான் அணியை பாதித்தாலும் இந்தியாவுக்கு எதிரான தொடர் என்பதால் சோதனையையும் சவாலாக எடுத்து பாகிஸ்தான் புதுவேகத்தையும் வெளிப்படுத்தலும்,

எனவே, மேற்படி பலவீனங்களால் பாகிஸ்தான் அணியை இந்திய அணி குறைத்து மதிப்பிட முடியாது.



யுஹானா

ஏனெனில், பாகிஸ்தான் அணி அண்மையிலேயே உலகின் முதல் தர அணியான அவுஸ்திரேலிய அணியை எதிர்கொண்டுள்ளதுடன் ஒரு சில போட்டிகளில் திறமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இதில் அணித் தலைவர் இன்சமாம், யுஹானா, அப்ரிடி, விக்கெட் காப்பாளர் அக்மல், அப்துல் ரசாக் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டுள்ளனர். இவர்கள் இந்திய அணிக்கு எதிராகவும் தமது ஆட்டத்தைத் தொடர்வார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்திய அணியும் பலமான அணி ஒன்றை அறிவிக்க வேண்டிய நிலையில் உள்ளது த்விர்க்க முடியாததே. இதற்காக அணித் தலைவர் கங்குலி தீவிர ஆலோசனைகளை நடத்தி வருகின்றார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக யாரை களமிறக்குவது, விக்கெட் காப்பாளரை நியமிப்பது போன்ற சிக்கல் எழுந் துள்ளது. இதனை நிவர்த்தி செய்ய சிறந்த வீரர்கள் தம்மை இனம்காட்டியும் உள்ளனர். எனவே, இந்திய கிரிக்கெட் அணி புது முகங்களுடன் புதிய பலத்துடன் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# எதிர்க்கட்சியை விமர்சிப்பதை அரசு கைவிட்டு நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும்

## எதிர்க்கட்சித்தலைவர் மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியை விமர்சிப்பதைக் கைவிட்டு நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்க்கட்சி தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். உடனுவரையில் இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இப்பொழுது மக்களின் பிரச்சினைகள் பற்றி ஏன் கவனம் செலுத்துகிறார்கள் இல்லை. சுனாமி அவசர நிலையின் போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். நாங்கள் இன்னும் தயாராகவுள்ளோம். 6 மாதகாலத்திற்குள் சகல வேலைகளையும் முடித்து வழமை நிலைக்குக் கொண்டுவர நாம் தயாராகவுள்ளோம் என அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதனைச் செய்யும் அதே வேளை இந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சாதாரணமக்களின் பிரச்சினையையும் நீக்குமாறு நாம் கூறுகின்றோம். எதிர்த்தரப்பினரைத் தூற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது எதிர்த்தரப்பினரைத் தூற்றி அந்தப்பிரச்சினைகளில் இருந்து தப்பிவிடமுடியாது. இப்பொழுது அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உ/த பரீட்சைக்கு இரு கட்டாய பாடங்கள் வெளியான தகவல்களில் உண்மையில்லை

## -கல்வியமைச்சு அறிவிப்பு

க.பொ.த. உயர்தரப் பாட்சைக்கு இரு கட்டாய பாடங்களிலும் ஒரு விருப பிற்குரிய பாடத்திலும் மாணவர்கள தோற்றலாம் என ஊடகங்களில் வெளியான தகவலகள் தவறானவை எனவும் பொய்யானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சோ, பல்கலைக் கழக மானியக் குழுவோ இது தொடர்பாக எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# தினமும் 24 ஆயிரம் ஆசிரியர்கள் விடுமுறை

இலங்கை முழுவதிலும் பத்தாயிரத்திற்கும் அதிகமான பள்ளிக்கூடங்களில் 1,90,000 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இவர்களில் ஒரு நாளைக்குப் பல காரணங்களை முன்வைத்து 24,000 ஆசிரியர்கள் ஒருநாளைக்கு விடுமுறையில் செல்கின்றார்கள் எனத் தேசியக்கல்வி ஆணையாளர் சபை அறிவித்துள்ளது. 10,000 ஆசிரியர்கள் ஆசிரியர் தொழிலில் இருந்து விலகி இராணுவத்திலும், சிலர் அமைச்சுக்களிலும், வேறு தனியார் நிறுவனங்களிலும் கடமைபுரிகின்றனர் எனத் தேசியக்கல்வி ஆணையாளர் சபை அறிவித்துள்ளது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்

22 11 1974

மறைவு

25 01 2005

**செல்லையா ரஜனிகாந்**

சங்கமன்/சுரேஸ்

எனதுஅன்பு மகனின் மறைவுச் செய்திகேட்டு நேரில் கலந்து கொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், மலர் மாலைகள் அணிவித்தோர், மலர் வளையங்கள் சமர்ப்பித்தோர் வியாபார முதல்வர்கள், சனசமூக நிலையத்தினர், ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்தவர்கள், பொருண்மிய நிறுவனத்தினர், கல்வி வலய நண்பர்கள், கராத்தேகழகத்தினர்கள், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் முக்கியமாக பரந்தன் மல்ரிபிள் சேவிஸ் நிறுவனத்தினருக்கும், நண்பர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள அனைவருக்கும் எது சிரம்தாழ்த்தி நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

* 23.02.2005 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மா சாந்திப் பிரார்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம

4/2 அம்பாள் வீதி,
(செம்மணிவழி)
நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயரும்
மனைவி, குடும்பத்தினர்.

(5366)



## அறிவித்தல்

## பதவி வெற்றிடம் ( தற்காலிகம் )

**வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூ.சங்கம் பரந்தன், கிளிநொச்சி.**

வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 2005-02-28ஆம் நாளாகும். விண்ணப்ப படிவங்கள் காரியாலயத்தில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| பதவி | | வெற்றிடம். |
|---|---|---|
| 01. சாரதி (உழு பொறி பெட்டியுடன்)ரக்ரர் | - | 06 |
| சாரதி ( கனரக வாகனம், பேருந்து, பாரவூர்தி ) | - | 05 |
| 02. அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும், மொழிபெயர்ப்புச் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்) | - | 01 |
| 03. காவலாளி (8ஆம் வகுப்பு சித்தி ) | - | 03 |

சம்பளம் :- அவரவர்களின் தகுதிக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு** :- (சாரதி:- தமிழீழ போக்குவரவுக் கழக உரிமம், சிறிலங்கா போக்குவரத்து ஆணையாளரின் உரிமம் என்பன வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் சிங்களம் பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வண்ணம்
பொதுமுகாமையாளர்,
வ.பி.பா.ஊ.உ.கூ.சங்கம்,
பரந்தன்.

( சி.11330 )



## 60 ஆம் நாள் நினைவலையும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
1952 - 03 - 04

உதிர்வு
2004 - 12 - 26

திருமதி
**துரைசிங்கம் சந்திரவதனா**

யார் இனி காட்டுவார்
பாதை எமக்கு?
எவர் வந்து தேற்றியும்
எம் கவலை தீராது
உம் பாச உறவுகள்
பரிதவித்து நிற்கின்றோம்
காலம் கரைந்தாலும்
உம் நினைவுகள்
நெஞ்சை விட்டகலாது

26.12.2004 அன்று கடற்கோள் காவு கொண்ட ஏனைய உறவுகளையும் நினைவு கூர்வதுடன் 23.02.2005 புதன் கிழமை எமது தற்காலிக இருப்பிடத்தில் நடைபெறும் ஆத்மா சாந்தி அந்தியேட்டி கிரியையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிரந்தர முகவரி:- ஆழிவளை, வடமராட்சி கிழக்கு.

தற்காலிக முகவரி:- மே/பா. நடராஜலிங்கம், 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

தகவல்:- குடும்பத்தினர்

(5735)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
1982 - 06 - 24

மண்ணின் மடியில்
2005 - 01 - 24

2 ஆம் லெப்.
**இறையவன்**
சந்திரவதனன்
கமலேஸ்வரன்

(ஞானசாரியார் வீதி. துண்ணாலை மேற்கு, கரவெட்டி)

திருமலை நகரில் வந்து - உதித்த
உத்தமனே எங்கள் - ஈஸ்வரனே
எம் குடும்பத்தின் மூத்த குல விளக்காய்
நீ பிறந்தாய் இவ் வையகத்தில்
உறவு என்னும் சங்கிலியால் - எம்மிடையே
பாசப் புயலே நீ விதைத்து விட்டு
தமிழ் இனத்தின் விடுதலைக்காய்
வரிப்புலி அணியில் நீ இணைந்து
இறையவன் என்னும் நாமங்கொண்டு
அரசியலில் நீ புகுந்தாய் ஐயா!
எம் தமிழ் மக்கள் மத்தியில் ஆற்றிய சேவையோ
எண்ணில் அடங்காதவை
உன் பணிமுடியும் முன்றே
உன் உயிரை வாகனம் காவு கொண்டதையா!
இறைவனே நீ வீரச்சாவடைந்து ஆயிரம் ஆயிரம்
மாவீரர்களில் ஒருவனாய் ஆகிவிட்டாய் - எம் மண்ணில்
நாட்கள் பல சென்றாலும் உன் நினைவுகள்
எம் நெஞ்சில் அழியா ஓவியமாய் உள்ளாய் இறையாவனே
உம் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

(5734)

தகவல்:- தங்கை பிறேமா

# ஜம்முகாஷ்மீரில் கடும்பனிப் பொழிவு
# 40 பேர் பலி, 100 பேரைக் காணவில்லை

(புதுடில்லி)
இந்தியாவிலுள்ள ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான பனிப்பொழிவிற்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளதுடன் 100 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். மேலும் 100 இற்கும் அதிகமான வீடுகள் பனிப்பொழிவு மற்றும் நிலச்சரிவுகளினால் புதைந்துள்ளன.

கடந்த 30 ஆண்டுகளுக்குப் பின்பு மிகவும் கடுமையான முறையில் இங்கு தற்போது பனிப் பொழிகின்றதென அம்மாநில மக்கள் தெரிவிக்கின்றனர். ஸ்ரீநகர் பூஷ், பாரமுல்லா அனர்ந்தனார் உள்ளிட்ட கிராமங்களில் இப்பனிப்பொழிவினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



"சனநாயக வேர்கள் என்ற அமைப்பு நடத்திய கருத்தரங்கில் மாநில தேர்தல் அதிகாரி நரேஷ்புத்தா எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, எம்.எல்.ஏ.இந்து என், ராம், நீதிபதி கே.எஸ் பக்தவச்சலம், ஓரிசா மாநில முன்னாள் ஆளுநர் எம்.எம் ராஜேந்திரன் பங்கேற்ற போது எடுத்த படம்.

### -தீவிரவாதிகளுடன் தொடர்பு விவகாரம்-
# நடிகை நக்மா மீது மும்தாஜ் குற்றச்சாட்டு
# "புகாரை எனக்கு எதிராக திசை திருப்புவதா?"

(சென்னை)
"தீவிரவாதிகளுடன் உள்ள தொடர்பு பற்றிய புகாரை எனக்கு எதிராக திசை திருப்புவதா?" என்று நக்மா மீது நடிகை மும்தாஜ் குற்றம் சாட்டி இருக்கிறார்.

பிரபல நடிகை நக்மாவுக்கும், தலைமறைவு தாதா தாவூப் இப்ராகிமின் தம்பி அனீசுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததாக தீவிரவாதி ஜம்போ பொலிசாரிடம் வாக்கு மூலம் கொடுத்து இருந்தார். மும்பை பந்த்ராவிலுள்ள நக்மாவின் வீட்டிற்குச் சென்று 'ஹவாலா' பணம் ரூ.10 இலட்சம் கொடுத்ததாகவும் ஜம் போ கூறியிருந்தார். இந்த வாக்கு மூலம் அரசியலிலும் திரை உலகிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியில் இணைந்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்த நடிகை நக்மா உடனடியாக இந்தப் புகாரை மறுத்தார். "ஜம்போ கூறிய நக்மா நான் அல்ல அதே பந்த்ராவில் வசித்து வரும் டி.வி நடிகை அவர்' என்று நக்மா விளக்கம் அளித்து இருந்தார்.

தற்போது சென்னையில் தங்கி இருந்து கவர்ச்சி வேடங்களில் நடித்து வரும் மும்தாஜின் உண்மையான பெயரும் நக்மாதான் மும்தாஜின் தந்தையும், இந்திப்பட தயாரிப்பாளருமான தபசும்கானுக்கும், தலைமறைவு தீவிரவாத தாதாக்களுக்கும் இடையே தொடர்பு இருந்து வந்ததாக சமீபத்தில் ஒரு தகவல் வெளியானது. எனவே நக்மா சொன்ன 'இன்னொரு நக்மா' மும்தாஜாக இருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது பற்றி மும்தாஜ் கூறுகையில் "என் இயற்கைப் பெயர் நக்மா என்பது உண்மைதான். புகார் கூறப்படும் 1988ஆம் ஆண்டு நான் 3ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் ஒரு 3 ஆம் வகுப்பு மாணவியை தீவீரவாதிகளுடன் எப்படி தொடர்புபடுத்த முடியும்."

எனக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. வேண்டுமென்றே எனக்கு எதிராக புகாரை திசை திருப்ப நடக்கும் முயற்சி இது. எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு இந்தத் தகவலை பரப்பியுள்ளனர். 1998ஆம் ஆண்டு சென்னை வந்த நான் இன்னும் வாடகை வீட்டில் தான் வசித்து வருகின்றேன். தாதாக்களுடன் தொடர்பு வைத்திருந்தால் நான் கோடீஸ்வரியாக இருந்திருப்பேன் ஆடிப்பாடி நான் கஷ்டப்பட்டு இருக்க வேண்டிது இல்லை. எனது சொந்த நாட்டுக்கு எதிரான ஒரு கும்பலுடன் நான் ஒரு போதும் தொடர்பு வைத்துக் கொள்ள மாட்டேன்" என்றார் நடிகை மும்தாஜ்

# பங்களாதேஷ் படகுவிபத்தில் 82 சடலங்கள் மீட்பு

(டாக்கா)
பங்களாதேஷில் நேற்று முன்தினம் இடம் பெற்ற படகு விபத்தில் மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 100 பேரைக் காணவில்லையென நீர்வளங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் டாக்காவின் அருகில் உள்ள நதியில் திடீரென வீசிய புயல்காற்று காரணமாக அதில் பயணித்துக் கொண்டிருந்த படகுகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் எம்.பி.மகராஷ் என்ற நதியில் மூழ்கி விட்டது. அதில் 200 பேர் பயணித்துள்ளனர். இவர்களில் 82 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பீகார் சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் கூட்டணி அரசை பாதிக்காது

### லல்லுப்பிரசாத் யாதவ் தெரிவிக்கிறார்

(புதுடில்லி)
பீகார் சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை எந்த விதத்திலும் பாதிக்காது என்று ராஸ்ரிய ஜனதாத் தலைவரும் ரயில்வே அமைச்சருமான லல்லுப் பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தொலைக் காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் இந்த அரசை மத்தியில் அமர்த்துவதற்காக நாங்கள் கடுமையாக உழைத்தோம் எனவே தேர்தல் முடிவுகள் எந்த மத்திய அரசையும் பாதிக்காது என்றும் தெளிவு படுத்தினார்.

பாரதிய ஜனதாக் கட்சிகளுடன் லோக் சனசக்தி தலைவர் ராம் பிலான் பாஸ்வான் ஆறு ஆண்டுகள் கூட்டணி வைத்திருந்தாகக் கூறிய அவர் மதவாத சக்திகளுடன் தாம் ஒரு போதும் கூட்டணி வைக்க விரும்பவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிலிருந்து பெறப்பட்ட மிளகாய்த்தூளில் புற்றுநோயை உண்டாக்கும் உணவு சாயம்

புற்றுநோயை உருவாக்கக் கூடிய உணவு சாயம் பயன்படுத்தப்பட்ட மிளகாய்த்தூளை விற்பனை செய்ததாக 3 இந்திய நிறுவன்ங்கள் மீது புகார் கூறப்பட்டுள்ளது. அதையடுத்து ஏற்றுமதி செய்வதற்காக இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. பிரிட்டனின் பல்வேறு வணிக வளாகங்களில் அந்நாட்டு உணவு தர அமைப்பு நடத்திய சோதனையில் 359 பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டவை என்று கண்டறியப்பட்டது. அதையடுத்து அப் பொருட்கள் கடைகளிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டன.

# இந்திய மக்களவை மற்றும் கூட்டணிமன்றங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 33 வீதத்தால் உயர்வு

(புதுடில்லி)
பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பதற்காக மக்களவை மாநில சட்டசபைகளில் 33 சதவீத இடங்கள் அதிகரிக்கப்படுவதால் தமிழக எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 311 ஆக உயர்ந்திருக்கிறது. இதனால் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 722 ஆகவும், தமிழக எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 311ஆகவும் உயர்கிறது மக்களவையில் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்குத் தற்போது 8 சதவீத இட ஒதுக்கீடு தான் உள்ளது. இவற்றில் பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்க வகைசெய்யும் மசோதா தயாரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் அதை மக்களவையில் தாக்கல் செய்யத்தான் முடியவில்லை. காரணம் அந்த மசோதாவில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு திருத்தத்தைச் சேர்க்கக் கோரி வருகின்றன. 33 சதவீத இட ஒதுக்கீட்டில் ஜாதி வரியாக உள்ள ஒதுக்கீடு வேண்டும் என்று சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம்சிங் கூறிவருகின்றார்.

பெண்களுக்கு மக்களவையில் மற்றும் மாநில சட்டசபைகளில் 33 சதவீதம் இட ஒதுக்கீடு அளிப்பதில் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தீவிரமாக உள்ளது.

அதைத் தொடர்ந்து ஏற்கனவே தயாரித்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை கிடப்பில் போட்டுவிட்டு புதிய மசோதாவைத் தயாரித்து உள்ளது. சோனியா காந்தி ஆலோசனையின் பேரில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதா தொடர்பாக அரசியல் கட்சித்தலைவர்களுடன், உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டீல் ஆலோசனை நடத்திவிட்டார்.

புதிய மசோதாவின்படி மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் தற்போது உள்ள இடங்கள் 33 சாவீதம் அதிகரிக்கப்பட்டு அவை அப்படியே பெண்களுக்கு ஒதுக்கப்படும். அதன்படி தற்போது 543 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையின் பலம் 722 ஆக உயரும். தமிழக சட்டசபைகளில் தற்போது 234 உறுப்பினர்கள் உள்ளனர். இதை 33 சதவீதம் உயர்த்தினால் உறுப்பினர்களின் எண்ணிக்கை 311ஆக அதிகரிக்கும் . இதேபோல் மற்றும் மாநில எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கையும் 33 சதவீதம் உயரும்.

# மோசடிக்கும்பல் பொலிசாரால் கைது

(சென்னை)
கம்யூட்டர் மூலம் போலி சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்து விற்ற மோசடி கும்பலைச் சென்னையில் பொலிசார் கைது செய்தனர். சமீபத்தில் பழைய குற்றவாளி ஒருவன் வடசென்னையில் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கும்பலை பொலிசார்கைது செய்துள்ளனர்.


# கேள்வி அறிவித்தல்–2005

## யாழ்ப்பாணம் மாநகர சபை

வீதியில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கு வரி அறவீடு செய்தல் பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான வரி அறவிடுதலை 01.03.2005 தொடக்கம் 31.12.2005 வரையான காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகளை கோரப்படுகின்றன.

- பருத்தித்துறை வீதி தொடக்கம் கே.கே.எஸ் வீதி வரையிலான ஆஸ்பத்திரி வீதி
- நாவலர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி வரையான கஸ்தூரியார் வீதி
- ஆரிய குளம் தொடக்கம் கே.கே.எஸ் வீதி வரையான ஸ்ரான்லி, பொன்னாலை வீதி
- புதிய தபால் நிலையச் சந்தி தொடக்கம் மனோகராத் தியேட்டர் சந்தி வரையான கே.கே.எஸ் வீதி
- மின்சார நிலைய வீதி

ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) ரூ.600,000.00 இத்தொகைக்குக் குறைவான தொகை கோரும் கேள்விக்காரரது கேள்வி இரத்துச் செய்யப்படும். பிணைப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.


| | |
|---|---|
| மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூ500.00 |
| வற்வரி15 % | ரூ.75.00 |
| மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ரூ.3,000.00 |

கேள்விப் படிவம் வழங்கும் இறுதித்திகதி:-28.02.2005 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி:-28.02.2005 திங்கட்கிழமை பி.ப 2.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் நேரம் 28.02.2005 திங்கட்கிழமை பி.ப 3.00 மணி
மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**கலாநிதி க.குணராசா,**
**மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

(சி.11348)

# அணிக்கு அக்தர் வீண்சுமை விலகிக்கொண்டது சரியானதே


அக்ரம்

இந்தியத் தொடரிலிருந்து சொஹைப் அக்தர் விலகிக் கொண்டது நல்லதுதான். இந்தத் தொடரில்இடம் பிடித் திருந்தால், அணிக்கு அவர் வீண் சுமையாகவே இருந்திருப்பார், என்கிறார் பாகிஸ்தான் முன்னாள் தலைவர்வாசிம் அக்ரம். பாகிஸ்தான் கிரிக்கெட் முன்னாள் அணித்தலைவரும் ஜாம்பவான் வேகப் பந்து வீச்சாளருமான வாசிம் அக்ரம் கராச்சியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அணியை பாகிஸ்தான் தேர்வுக்குழு சிறப்பாகவே தேர்வு செய்திருக்கிறது. இந்திய ஆடுகளங்கள் ஸ்பின்னுக்கு ஒத்துழைக்கும் ஆகவே டேனிஷ் கனேரியா, அர்ஷாத் கான் ஆகிய இரு ஸ்பின்னர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இருவரும் தரமான ஸ்பின்னர்கள் குறிப்பாக இந்திய துடுப்பாட்ட வீரர்களை அர்ஷாத் சிரமப்படுத்துவார்.

இந்திய துடுப்பாட்டக்காரர்களை ஆட்டமிழக்கச் செய்வது அவ்வளவு சுலபம் என்று நான் கூறவில்லை. அதேசமயம் இரு ஸ்பின்னர்கள் இருப்பதன் மூலம், ஐந்து நாட்களும் பாகிஸ்தான் அணி ஆதிக்கம் செலுத்த முடியும். அணியில் இளம் வீரர்கள் இருப்பதும் நல்லதுதான். சமீபத்திய அவுஸ்திரேலிய முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்த இளம் வீரர்களின் துடிப்பான ஆட்டத்தைக் காண முடிந்தது. 90 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் அணியிடம் இருந்த அதே துடிப்பை இந்த வீரர்களிடம் பார்க்க முடிகிறது.

தொடரில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்ததன் மூலம் சரியான முடிவெடுத்திருக்கிறார் சொஹைப் அக்தர், அரைகுறை உடல் திறனுடன் அணியில் இடம் பிடித்திருந்தால், அணிக்கு அவர் வீண் சுமையாகவே இருந்திருப்பார் தவிர அவரது சொந்தத் திறமையும் பாதிக்கப்பட்டிருக்கும். முதலில் அவர் தனது உடல் நலனில் கவனம் செலுத்தட்டும் முழுவதும் குணமா்ன பின் மீண்டும் அணிக்குத் திரும்பலாம் இவ்வாறு தெரிவித்துள்ளார் வாசிம் அக்ரம்.

# துவக்க ஆட்டக்காரரை மாற்றுவதால் எனது ஆட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது


சேவாக்

தன்னோடு இணைந்து களமிறங்கும் துவக்க ஆட்டக்காரர்களை அடிக்கடி மாற்றுவதால் பிரச்சினை எதுவும் இல்லை என்கிறார் சேவாக்.

அவுஸ்திரேலிய தொடருக்கு இந்திய அணி முறையாக தயாராகவில்லை. இதனால் தொடரை இழக்க வேண்டியதாயிற்று. இத்தவறை மீண்டும் ஒருமுறை செய்யமாட்டோம். பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றி பெற முழுமையாக முயற்சிப்போம். இத் தொடருக்காகப் பயிற்சி முகாம் அமைக்கப்படாதது பாதிப்பை ஏற்படுததாது. ஏனென்றால் டியோதர்,சாலஞ்சர், துலீப் கிண்ணம் என ஏராளமான உள்ளூர் போட்டிகளில் அணி விளையாடியுள்ளது.. இதனால் வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். முல்தானில் நான் 309 ஓட்டங்கள் எடுத்ததை வைத்து பாகிஸ்தானுக்கு எதிராக மட்டும் சிறப்பாக செயல்படுவதாகக் கூற இயலாது. பாகிஸ்தான் அணியில் அக்தர் இல்லாதது பெரிய விடயம் இல்லை. கனேரியா,ராணா போன்றோர் இருக்கின்றனர். துவக்க ஆட்டக்காரராக வரும் வீரரை அடிக்கடி மாற்றுவது எனது துடுப்பாட்டத்தை பாதிக்கவில்லை. நான் எனது துடுப்பாட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். மற்ற வீரருக்கு அதிக முக்கியத்துவம் தருவதில்லை இவ்வாறு சேவாக் கூறினார்.





# ஐ.சி.சி.யின் புதிய பந்து வீச்சுமுறை முதல் பயனடைகிறார் ஹர்பஜன் சிங்



ஐ.சி.சி. அறிவித்த புதிய விதிமுறைப்படி பயன் அடையும் முதல் பந்துவீச்சாளர் என்ற பெருமை பெறுகிறார் ஹர்பஜன் சிங் சுழல், மிதவேகப்பந்து வீச்சு மற்றும் வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குதான் கையை வளைக்கவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.)நிபந்தனை விதித்து இருந்தது. இது. சமீபத்தில் தளர்த்தப்பட்டது. இதன் படி அனைத்து வகை பந்து வீச்சாளர்களும் 15 டிகிரிவரை வளைத்து பந்து வீசலாம். இந்த புதியவிதிமுறை மார்ச்முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருகிறது. இதில் முதல் பயனாளியாக வருகிறார் ஹர்பஜன்.

கடந்த டிசம்பரில் நடந்த வங்கதேசத்துக்கு எதிரான சிட்கொங் டெஸ்ட் போட்டியின் போது ஹர்பஜன் சுழற்பந்து வீச்சு குறித்து புகார் கூறப்பட்டது. இவர் ‘துஸ்ரா’ வகையில் வீசும் போது, அளவுக்குஅதிகமாக கையை வளைப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஐ.சி.சி. உத்தரவுப்படி மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில், புருஸ் எலியட் தலைமையிலான நிபுணர் குழு ஹர்பஜன் பந்துவீச்சு குறித்து ஆய்வு செய்தது. இதில் விதிமுறைகளுக்கு உட்பட்டே பந்து வீசுவதாக கண்டறியப்பட்டது. இதை அடுத்து பாகிஸ்தான் தொடருக்கு தேர்வு செய்யப்படுவதும் உறுதியானது.தனது அறிக்கை பற்றி புருஸ்எலியட் கூறுகையில் “ஹர்பஜன் பந்து வீச்சு தொடர்பான அறிக்கை ஐ.சி.சி. புதிய விதிமுறைப்படி (15 டிகிரி) தயார் செய்யப்பட்டுள்ளது. தூஸ்ரா வீசுவதில் ஹர்பஜன் மற்றும் முரளிதரன் இடையே நிறைய வித்தியாசம் உள்ளது,” என்றார்.


லொஸ்ஏஞ்சல்ஸில் நடந்த மிடில்வெயிட் குத்துச் சண்டை சம்பியன்சிப் போட்டியில், அமெரிக்காவின் பெர்னார்டு ஹாப்கின்ஸ் (இடது), பிரிட்டன் வீரர் ஹோவர்ட் ஈஸ்ட்மேனின் ஆக்ரோஷமான மோதல் இது இந்தப் போட்டியில் ஹாப்கின்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

# எப்.ஏ.கிண்ண கால்பந்து போட்டி கிறிஸ்ரியானோ ரொனால்டோ அபாரம்




எப்.ஏ. கோப்பை கால் பந்து தொடரில் மான் செஸ்டர் யுனைடெட், எவர்டன் அணியை வீழ்த்தியது.

முன்னணி கிளப் அணிகள் பங்கேற்கும் எப்.ஏ. கோப்பை கால் பந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நடக்கிறது. கடந்த சனியன்று நடந்த லீக் போட்டியில்,துவக்கத்தில் இருந்தே மான்செஸ்டர்அணி ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக இந்த அணியின் முன்னணி வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ அபாரமாக விளையாடினார். இவர் ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். பின்னர் இரண்டாவது பாதியில் 58 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மீண்டும் ஒரு கோல் அடிக்க மான்செஸ்டர் வலுவான முன்னிலை பெற்றது.

இதற்கு பதிலடி கொடுக்க எவர்டன் வீரர்கள் கடுமையாக போராடியும் பலன் கிடைக்கவில்லை இறுதியில் மான்செஸ்டர் அணி 2-0 என்ற கோல் முன்னிலையில் வெற்றி பெற்றது. அர்செனல் ஷெப்பீல்ட் யுனைடெட் அணிகள் இடையிலான ஆட்டம் 1-1என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

# கேணல் கிட்டு ஞாபகார்த்த கால்பந்துபோட்டி மாவட்ட அணிகளுக்கான போட்டி இம்மாத இறுதியில்

வருடா வருடம் மாவட்ட அளவில் மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறந்த கழக அணிகளை ஒன்றிணைத்த, எட்டு மாவட்டங்களையும் இணைத்த தேசிய அளவிலான கேணல் கிட்டு நினைவான உதைபந்தாட்டப் போட்டி இம்மாத இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளதாக தமிழீழவிளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி போட்டி தை மாதம் 16ஆம் திகதி நடைபெற இருந்த போதிலும் இயற்கை அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டதுடன் இவ் வருடத்திற்குரிய 4 ஆவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப் போட்டியும் இவ்வருட நடுவப் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே கேணல் கிட்டு நினைவான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் மாவட்ட அணிகளில் விபரங்கள், புகைப்படங்கள் என்பவற்றை 25.02.2005க்கு முன் விளையாட்டுத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், போட்டி சம்பந்தமானசுற்றுநிருபம் மாவட்ட விளையாட்டுத்துறைக்கு அனுப்பிவைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 0212285715 என்ற தொலைபேசிஇலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்பதனையும் அணிகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் பதக்கங்களும் வழங்கப்படும் எனவும் தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.


## மாவீரர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி நாளை நடைபெறுகிறது

மாவீரர் வெற்றிக்கிண்ண மென்பந்து போட்டிகளின் இறுதிப்போட்டி நாளை காலை 9.00மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் த.ராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டி சுனாமி அனர்த்தத்தினால் பிற்போடப்பட்டிருந்தது. அப்போட்டியின் இறுதிப்போட்டியில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட அணிகள் நாளை இடம்பெறும் இறுதிப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுகொண்டுள்ளார்.

(கு)

# மேற்கிந்தியத்தீவு அணியின் நடவடிக்கையால் டிஜிசல் நிறுவனத்துக்கு 20 மில்லியன் நஷ்டம்




அண்மையில்V.B கிண்ண முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணியினரின் நடடிவக்கை காரணமாக 5 வருடகால ஒப்பந்தத்தில் 20 மில்லியன் டொலர் இழக்கப்பட்டிப்பதாக டிஜிசல் நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை அணியுடன் சென்றிருந்த ரிச்சர்ட் நொவல் தெரிவித்துள்ளார். டிஜிசல் நிறுவனம் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் நீண்டகாலமாக ஒப்பந்தம் செய்துவருகின்றது.


இவர்களின் அண்மைய நடவடிக்கைகள் நிறுவனத்துக்கு ஏமாற்றத்தைத் தருவதாகவும் நிறுவனத்தை நிர்க்கதிக்குள்ளாக்குவதாகவும் கிரிக்கெட்துறை ஊடகவியலாளர் ரொனி கொசியர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார். கிரிக்கெட்சபை டிஜிசலுடனான ஆதரவை இழக்கும் நிலை தோனறுமோ என்ற கவலை தோன்றியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் மூலம் கடந்த வருடத்தையும் இவ்வருடத்தையும் ஒப்பிடும்போது 5மில்லியன் டொலர் இழக்கப்படலாம் என்று நொவல் தெரிவித்துள்ளார்.


அவுஸ்திரேலிய சுற்றுலாவின் போது பிரையன் லாரா போன்றோர் தனிப்பட்ட முறையில் விளம்பர ஒப்பந்தத்தில் ஈடுபட்டதாக பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத்தகவல்கள் உண்மையற்றவை என்றும் அது வீரர்களின் நற்பெயருக்குகளங்கத்தை ஏற்படுத்துவதாக கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

## பங்கேற்கிறார் சச்சின்



துலீப்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக ஞாயிற்றுக்கிழமை ஹைதராபாத் சென்றடைந்தார் சச்சின் டெண்டுல்கர்.மேற்கு மற்றும் தென் மண்டல அணிகளுக்கு இடையிலான துலீப் கோப்பை போட்டி ஹைதராபாத் விசாகாமைதானத்தில் இன்று முதல் நடைபெறுகிறது.அதில் மேற்கு மண்டல அணிக்காக சச்சின் டெண்டுல்கர் விளையாடுகிறார் ராகுல் ராவிட் தலைமையில் தென்மண்டல அணி பங்கேற்கிறது.



## சிந்தனைக்கு

அரசில் என்பது மக்கள் மீது ஆட்சியை நடத்தும் அல்லது அதிகாரத்தை செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி; மக்களின் நல் வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 22-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## மூன்றாண்டுகள் கடந்த நிலையில்...

சிறிலங்கா சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. ஆயினும், மூன்றாண்டுகளின் பின்பும் இவ் உடன்பாட்டின் நோக்கம், எதிர் பார்க்கை எந்தளவிற்கு எட்டப்பட்டுள்ளது என்பதும், இவ்உடன் பாட்டின் எதிர்காலம் குறித்தும் பலமான கேள்விகள் இன்றும் எழுந்து கொண்டே இருக்கின்றன.

இவ் உடன்பாடு சில வேளைகளில் யுத்த நிறுத்த உடன்பாடு எனவும், சில வேளைகளில் புரிந்துணர்வு உடன்பாடு எனவும் கூறப் படுவதுண்டு. ஏனெனில், யுத்த நிறுத்த விதிகளையும், யுத்த நிறுத்த அமுலக்கத்தைப் பற்றியும் இவ் உடன்பாட்டின் ஒரு பகுதியாகவுள்ள அதேவேளை, இரு தரப்பினர் இடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்துதலும், இயல்பு நிலையை மீளக் கொண்டு வருதலும் இவ் உடன்பாட்டின் மறு பகுதியாகவும் உள்ளது.

ஆனால், இவ் உடன்பாடு கைச்சாத்தாகி மூன்றாண்டுகள் கடந்து விட்ட நிலையிலும், இவ் உடன்பாடு பூரணமாக அமுல்படுத்தப் பட்டதாக இல்லை. இவ் உடன்பாட்டின் ஒரு பகுதியாகிய யுத்த நிறுத்தம் என்பது கடைப்பிடிக்கப்படும் ஒன்றாக இருப்பினும்கூட இதில் ஒரு தரப்பு - அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் வழமைக்கு மாறாகவும், அளவிற்கு அதிகமாகவும் கடைப்பிடிக்கும் பொறுமையே இவ் யுத்த நிறுத்தம் உயிர் வாழ்வதற்கும், நீடித்துச் செல்வதற்கும் காரணமாகும்.

அதிலும் குறிப்பாக, மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னரும் விடுதலைப்புலிகள் பொறுமை காப்பதானது, இவ் உடன்பாட்டினைப் பேணுதல் வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்தினால் மட்டுமே ஆகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தினதும், ஆயுதப் படையினதும் நடவடிக்கை கள் விடுதலைப்புலிகளின் பொறுமையைச் சோதிப்பவையாகவே உள்ளன.

யுத்த நிறுத்த அமுலாக்கம் சவால் நிறைந்ததாக இருப்பினும், விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் பொறுமையினால் ஏதோ ஒருவகையில் கடைப்பிடிக்கப்பட்டுவரினும் உடன்பாட்டின் ஒரு பகுதியான புரிந்துணர்வை ஏற்படுத்துதல் - இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல் என்பது பெரிதும் சவால் நிறைந்ததாகவே உள்ளது. யுத்த நிறுத்த உடன்பாட்டைக் கேள்விக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கும் ஒன்றாக இது உள்ளது எனின் மிகையாகாது.

அதாவது, ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்றாண்டுகள் ஆகி விட்டன. ஆனால், இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் குடியமர முடியவில்லை. அதாவது, உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறிக்கொண்டு மக்களின் குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்களை ஆயுதப் படைத் தரப்பினர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து கொண்டு தமது தொழில் நடவடிக்கைகளையும் இழந்துள்ள மக்கள் பலமுறை முறையிட்டும், போராட்டங்களை நடத்தியும் நீதிமன்றம் சென்றும் தமது பிரச்சினையைத் தீர்க்க முடியாதுள்ளனர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவென அரசிற்கும் - புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் சில முடிவுகள் எடுக்கப்பட்ட போதும் இராணுவத் தரப்பு போட்ட முட்டுக்கட்டையினாலும், இந்திய இராணுவ ஆலோசகர்களை அழைத்தல் போன்ற அரசாங்கத்தின் இழுத்தடிப்பு நடவடிக்கைகளினாலும் அவ்விடயத்தில் முன்னேற்றம் காணமுடியவில்லை. இதன் காரணமாகப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட அன்றி உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழு கூட அர்த்தமற்றதாகியது.

அடுத்ததாக, மீன்பிடித் தடைச் சட்டம் என்பது தளர்த்தப் பட்டதே ஒழிய இன்னமும் அது பூரணமாக நீக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, கடலுக்குள் செல்வதற்கான நேரக் கட்டுப்பாடு, தூரக் கட்டுப்பாடு என்பனவும் அமுலில் உள்ளதோடு, அடையாள அட்டை முறையும் கடலுக்குள் சென்று வருவதற்கான பாதைகளும் கட்டுப் படுத்தப்பட்டவையாகவே உள்ளன. இது மீனவர்களின் இயல்வு வாழ்க்கையையும், சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளையும் அனுமதிப்பதாக இல்லை.

அடுத்ததாக, யுத்தத்தினால், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க் கையை மேம்படுத்துவ்தற்கான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக் கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் எவையும் மேற்கொள் ளப்பட்டதாக இல்லை. இதற்கென பேச்சுவார்த்தை மூலம் உருவாக் கப்பட்ட 'சிரான்' அமைப்பும் சிறிலங்கா அரசின் நடவடிக்கை களி னால், அதாவது முடக்கும் நடவடிக்கைகளினால் செயற்பட முடியாத தொரு கட்டத்தையே அடைந்துள்ளது.

இந்த வகையில், இவ் யுத்தநிறுத்த உடன்பாடு மூன்று ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், தனது குறிக்கோள்கள் எதையும் எட்டாத நிலையில், விடுதலைப்புலிகள் காட்டிவரும் அதீதமான பொறுமை யினதும், சமாதானத்தின் மீதான ஈடுபாட்டினதும் காரணமாகவே நீடித்துச் செல்கின்றது என்பதே நிதர்சனமாகும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையோ, அவர்களின் அத்தியாவசியமானதும், அவசியமானதுமான தேவைகளையோ நிறைவு செய்ய அரசாங்கம் முயலாதிருப்பதோடு, தொடர்ந்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்த நிறுத்த மீறல் செயற்பாட்டிலேயே அக்கறைகாட்டுமானால், யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் என்பது தவிர்க்க முடியாது கேள்விக்குள்ளாகிவிடும் என்ற முடிவிற்கே மூன்றாண்டின் முடிவில் வரவேண்டியதாகியுள்ளது.

# தமிழ்மக்கள் மீது குற்றம் புரியும் படையினரை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதே வழக்கம்

## -மன்னார் பொது அமைப்புகள் சனாதிபதிக்குக்கடிதம்

தமிழ் மக்கள் மீது குற்றம் புரியும் படையினருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக குற்றவாளியை விடுவிப்பதற்கான பல வித தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்வதே வழக்கமாகவுள்ளதென மன்னா தாழ்வுப் பாட்டில் கடந்த 11 ஆம் திகதி மாணவன் மீது பொலிசார் ஒருவர் மேற்கொண்ட பாலியல் வன்முறை தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் நீதிசமாதான ஆணைக் குழு, மன்னார் பொதுசன ஒன்றியம் மன்னார் வர்த்தக சங்கம் ஆகியன கையெழுத்திட்டு மன்னார் அரசாங்க அதிபருடாக அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு;

தாழ்வுப்பாட்டு பொலிஸ்படையைச் சேர்ந்த ஒருவர் அவ்வழியில் சென்ற 18 வயது மாணவன் ஒருவரை பலாத்காரமாக மறைப்பு வேலியுடன் கூடிய அருகிலிருந்த ஒரு குளிக்கும் கிணற்றடிக்கு இழுத்துச் சென்று வாய்க்கு துணியைத் திணித்து பாலியல் வல்லுறவு கொண்டதுடன் அவரைக கடுமையாகத் தாக்கி அவரது ஆணுறுப்பை பலத்த காயங்களுக்குள்ளாக்கியுள்ளார். பையன் இரத்தம் கடுமையாக வளிந்தோடும் நிலையில் வெளியே வந்தபோது அவ்வழியாகச் சென்ற ஒருவர் மாணவனை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். குற்றவாளி அவ்விடத்தை விட்டு ஓடி பொலிஸ் காவலரணுள் சென்று மறைந்துள்ளார். இது நடந்தது 11.02.2005 சுமார் 2.00 மணியளவில் தாழ்வுப்பாட்டு கடற்கரையிலாகும்.

மன்னாரில் கைதுகளும், தாக்குதல்களும் ஆண், பெண் இருபாலார் மீதும் படையினரால் நடத்தப்படும் பாலியல் வன்முறைகளும் மிகவும் பொதுவான நிகழ்வாகி விட்டது. என்பது எமது கடந்த கால அனுபவமாகும் படைத் தரப்பினர் சிலர் வெறியாட்டம் ஆடும் ஒவ்வொரு சந்தர் பங்களிலும் மக்கள எதிர்ப்புக்காட்டுவதும், அவ்வேளைகளில் சில சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பாவனை காட்டப்படுவதும் வழக்கம். ஆனால் அக் குற்றம் எதிர்காலத்தில் மீண்டும் செய்யப்படாதவாறு உறுதிப்படுத்தப்படும் வகையில் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக குற்றவாளியை விடுவிப்பதற்கான பலவித தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்வதே வழக்கமாகவுள்ளது.இது அக்குற்றவாளி அப்பாவி தமிழ் மக்கள் மீது மீண்டும் மீண்டும் மிக அதிகமான ஆத்திரத்துடனும் பளிவாங்கும் உணர்வுடனும் குற்றச்செயல் புரியத் தூண்டுவதாய் அமைந்துள்ளது. ஏனெனில் தமிழர்களுக்கு எதிராக எவ்வித குற்றத்தை இழைத்தாலும் தான் எவ்வித கோள்விகளுக்கும் உள்ளடங்கப்படமாட்டோம் என்று நிச்சயமாக தெரிந்து வைத்திருப்பதுடன் அதற்காகவே அவனுக்குச் சம்பளம் கொடுக்கப்படுவதாகவும் நம்புகிறான். எனவே தமிழர் வாழும் பகுதிகளில் படையினர் இருக்கும் வரை தமிழர் தமது சொந்த வீடுகளில் கூட அமைதியாக வாழவோ சுதந்திரமாக சுவாசிக்கவோ இயலாது என்பதை நாம் மிகவும் உறுதியாக நம்புகின்றோம்.

ஆகையால் தங்களிடம் நாம் வேண்டுவது என்னவென்றால் தமிழர் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து படைமுகாம்களை அப்புறப்படுத்தவேண்டும். என்பது தான் இதனை உடனடியாக செய்ய முடியாது விடின் கொஞ்சம் கொஞ்சமாக வேனும் படிப்படியாகவும் செயற்படுத்தி இயல்பு நிலையை ஏற்படுத்தலாம். சண்டை நடைபெற்ற காலங்களில் கிராமங்களில் படையினரை நிறுத்திவைக்கவேண்டிய அரசின் தேவையை தவிர்க்க முடியாததாய் இருந்திருக்கலாம். ஆனால் சமாதானத்துடன் கூடிய போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் இக்கால கட்டத்தில் படையினர் திரும்ப அழைக்கப்பட்டு பிரதான முகாம்களுக்கு அனுப்பப்படுவதே நியாயமானது இது நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டும் ஒரு செயலாக அமையும். தாள்வுப் பாட்டைப் பொறுத்த மட்டில் அது ஓர் நூறு வீத மீன்பிடிக் கிராமமாகும் அனேகமான ஆண்கள் இரவில் கடலில் தங்கி விடுகின்றனர். இன் நிலையில் படையினரை குறிப்பாக அதிகமான வேளைகளில் குடி போதையில் படையினர் கிராமத்தின் மத்தியில் சுதந்திரமாக நடமாட சந்தர்ப்பத்தினை வழங்குவது விரும்பத்தக்கது அல்ல. மேலும் இவ் வாழக்கை நடத்தும் தரப்பினர் மீது அழுத்தம் கொடுத்து சட்டத்தில் எந்த ஓட்டைகளையும் பாவித்து குற்றவாளிகளுக்கு எந்தவித சந்தர்ப்பத்தையும் அவர்கள் தப்பிவிட வழங்கிவிடாதபடில் கண்காணிக்குமாறு வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிரத சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

புகையிதர சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம். நள் ளிரவு முதல் இந்தப் பணிப்புறக்கணிப்புத தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிப்புறக்கணிப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய புகையிரத சேவையாளர்களின் கூட்டு முன்னணியின் பேச்சாளர் சம்பத் ராஜித 2500 ரூபா சம்பள உயர்வு உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் தொடர்கிறது எனவும் ஏற்கனவே தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளன. தற்போது நாடுபூராகவும் 8 ஆயிரம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். தமது இந்தக கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மிகவும் கடினமான தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

## –கௌசல்யன் கொலை தொடர்பில்–

# ஐ.நா.செயலரின் அறிக்கைக்கு அரசின் கண்டனம் குறித்து ஐ.தே.க. அதிருப்தி

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் விடுதலைப் புலிகளின் மட்டு -அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கொலை தொடர்பில் வெளியிட்ட அறிக்கை தவறானது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது. உள்நாட்டில் அதிகாரத்தை

பயன்படுத்தி அரசாங்கம் மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளை போல் ஐக்கிய நாடுகள் சபை செயலாளருடன் இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளு மன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியினர் நடந்து கொண்ட விதம் கோமளித் தனமானது என்றும் அவா சுட்டிக் காட்டியுள்ளார். (32)

# பொருளாதார உறுதித்தன்மையைப் பயன்படுத்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுக


## -அரசாங்கத்திடம் ரணில் வலியுறுத்து

நாட்டில் பொருளாதாரஉறுதித் தன்மை காணப்படுவதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தும் வகையில் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்திற்குப் பிறகு நிவாரண உதவியாக உலக நாடுகள் சுமார் பொருமளவு நிதியை வழங்கியுள்ளன. இந்த நிதியைக் கொண்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை அரசாங்கம் நிறை வேற்ற வேண்டும் கட்சி அரசியலைத் துறந்து நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வுள்ளது. அதனால் நாட்டு மக்களின் நலன் கருதி இன்றய அரசாங்கம் செயற்படாவிட்டால் ஆட்சியைக் கைவிடுவதே சிறந்தது எனத் தெரிவித்துள்ளார். (32)

— சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் —

# உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டடம் திறந்துவைப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதன் நிகழ்வாக பொதுச் சுடரினை கிழக்கு மாகாண சர்வதேச தமிழீழ மாணவர்பேரவைப் பொறுப்பாளர் செஞ்சுடர், யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார், யாழ் மாவட்டமாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஸ்ணா, விரிவுரையாளர் கதிரமலை ஆகியோர் ஏற்றினர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசி ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை முகாமைத்துவதுறைத்தலைவர் கதிரமலை நிகழ்த்தினார். உயர்தொழில் நுட்பக்கல்லூரி இயக்குனர் ரி.இராஜரட்ணம் தலைமை உரையைத் தொடர்ந்து சிறப்புரையினை யாழ்ப்பாணப் பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார்,யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் சிவநாதன், யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாறாஜ்,யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப்



யல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ். யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாறாஜ், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெகன் பொறுப்பாளர் கலைவிழி, உயர்தொழில்நுட்பக் கல்லூரி மாணவ ஒன்றியத் தலைவர் ஜெகன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து நன்றியுரையும், இக்கட்டடத்தை அமைத்தவர்களுக்கான பரிசில்களைச் சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் வழங்கினார். (36)

## அமெ...

இவர்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் விசேட உலங்கு வானூர்திகள் மூலம் கொக்கலவிலுள்ள இலங்கை விமானப்படைத்தளத்தைச் சென்றடைந்தனர்.

பின்னர் பலத்த பாாதுகாப்பு மத்தியில் மாத்தறைக்குச் சென்ற பில்கிளிங்டனும் ஜோஜ்புஷ்சும் கொக்கலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப்பார்வையிட்டனர்.

அங்கிருந்து வெலிகம சென்ற இவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்புரி நிலையத்திற்குச் சென்று சிறுவர்களைப் பார்வையிட்டதுடன் அங்குள்ள சிறுவர்களுக்கு உளவியல்சார்உதவிகளையும் அவர்கள் வழங்கி உள்ளனர்.

முன்னாள் சனாதிபதிகளான பில்கிளிங்டன் மற்றும் ஜோஜ்புஷ் ஆகியோருடன் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவரும் இலங்கை ஊடகத்துறை அமைச்சரும் சென்றிருந்தனர்.

பில்கிளிங்டனும் ஜோஜ் புஷ்சும் நேற்றுப்பிற்பகல் இலங்கையில் இருந்து புறப்பட்டுச்சென்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களிற்கான நிவாரண நடவடிக்கைக்காக இணைந்து செயற்படுவதற்கான ஒரு பொறிமுறையை அமைப்பதில் தான் நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு சனாதிபதி சந்திரிக்காவைச் சந்தித்தபின் செய்தியாளரிடம். அவர் இவ்வாறு கூறினார் எனது அனுபவத்தில் மத்திய கிழக்கில் அல்லது வட அயர்லாந்திலும் தனிப்பட்ட செயற்திட்டங்களில் மக்கள் இணைந்து செயற்பட்ட போது அது அவர்களின் வேறு பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எம்பிலிப்பிட்டிய....

வைத்திருக்கும் சிறைக் கூடத்தின் உள்ளிருந்தே கைக் குண்டு வீசப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. கைக் குண்டின் கிளிப் கூண்டிற்குள் இருந்து எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து நீதிமன்ற விசாரனைக்காக கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்ட 33 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எம்பிலிப்பிட்டியப்பகுதி வீதிகள் மூடப்பட்டு தப்பியோடியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (32)

## 175வீடுகளை...

மனிபால் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் நடத்தினர்.

பின்னர் காலை 10.30 மணியள்வில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செலயகத்தில் பணிப்பாளர் தூயவன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் மனிபால் பெர்னாண்டோ தலைமையிலான குழு கலந்துகொண்டது.

இந்தக் கலந்துரையாடல் முடிவின்போது விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

இங்கு வருகை தந்திருக்கும் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர்மனிபால் பெர்னாண்டோ அவர்கள் 175 வீடுகளை வடகிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் கட்டித்தருவதாகக் கூறியுள்ளார். அது தொடர்பான திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவே திட்டமிடல் செயலகத்தில் ஒன்றுகூடி ஆராய்ந்தோம்.

அதன்படி திட்டமிடல் செயலகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு வீட்டுத்திட்டங்களை அமைத்து கொடுத்ததோ அதே திட்டத்தில் இந்த 175 வீடுகளையும் அமைக்க முடிவெடுத்துள்ளோம்.

மேலும் இவ்வேலைத்திட்டங் களை இந்த மாத இறுதியில் இருந்தே ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலும் விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு முடிவுகள் எடுத்துள்ளோம்.

குறிப்பாக இந்த உதவிகள் யாவையும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினூடாக கிடைக்கப் பெறுகின்ற உதவிகளைத்தான் இவர்கள் வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதிக்கு திருப்புகின்றனர். அவ்வாறு அனுப்பி வைப்பதையிட்டு நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.ஏனென்றால் இங்கு எட்டு மாவட்டங்களிலும் எட்டு உதைபந்தாட்ட சம்மேளனங்கள் உள்ளன. இந்த உதைபந்தாட்டச் சம்மேளனங்கள் எட்டும் பதிவு செய்யப்பட்டும் உள்ளன. எனவே எங்களுடைய பகுதிக்கு இந்த உதவித்திட்டங்களை கொண்டு வருவதென்பது ஒரு புதிய விடயம். எங்களுடைய மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பார்த்து இந்த உதவித் திட்டங்களைச் செய்வதில் நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தொடர்ச்சியாக சர்வதேச தரத்திலான ஒரு உதைபந்தாட்ட மைதானத்தையும் அமைத்து தருவதற்கான உத்தேசத் தீர்மானத்தையும் எடுத்துள்ளோம்.

எதிர்வரும்காலங்களில் அப்படியான ஒரு மைதானத்தை எமது பகுதியில் அமைப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது.

ஆகவே விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள்,விளையாட்டு வீரர்களை ஆதரிப்பவர்கள் எல்லோருமே இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் வளர்ச்சிக்காக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதையே நாம் வேண்டிநிற்கின்றோம் என்றும் பாப்பா அவர்கள் தெரிவித்தார்.

அத்துன் மனிபால் பெர்னாண்டோ குழுவினர் முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகதிகளையும் பார்வையிட்டனர். (கு)

# ஜேர்மன் அமைச்சருடன் கூட்டமைப்பு பா.உகள் சந்திப்பு

ஜேர்மன் அமைச்சரை -தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்று கொழும்பு ஜேர்மன் தூதரகத்தில் வைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினிசிதம்பரநாதன் ஆகியோர் உட்பட்ட குழுவினர், ஜேர்மன் பொருளாதாரக் ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமானஅமைச்சர் ஹெக்-லுஎல் விவ்லோ றொக்-லுஎல் ஐச் சந்தித்தனர். இச் சந்திப்பில் இக் குழுவினர் சுனாமியால் பாதிப்படைந்த பிரதேசத்தின் அபிவிருத்தி ஒரு பொதுவான பொறிமுறை வடக்கு கிழக்கிற்குத் தேவை அப்பொறிமுறையை அமைப்பதில் அரசு தாமதித்து வருகிறது எனக் கூறியதோடு போர் நிறுத்த உடன்படிக்கை அமுலாகி மூன்று வருடங்களில் இக் கட்டான நிலையிலுள்ளது எனவும் எடுத்துக் கூறினார்.

# எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்கக்கோரி ஊர்வலங்கள் மீண்டும் ஆரம்பம்

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி ஊர்வலங்களும் பிரார்த்தனைகளும் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

சுனாமி கடற்பேரலைத் தாக்கத்தின் பின்னர் நின்றுபோயிருந்த இந்த ஊர்வலங்களும் பிரார்த்தனைகளும் மீண்டும் நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டி சுதுஹம்பொல நகரசபை விளையாட்டரங்கில் ஆரம்பமான இந்த உர்வலம் தலதா வீதியூடாக தலதா மாளிகை சதுக்கம்வரை சென்றடைந்தது. இதனையடுத்து தலதா மாளிகையில் பிரார்த்தனைப் பூசை நடைபெற்றுள்ளது.

இதேவேளை இந்தப் பிரார்த்தனையும் ஊர்வலமும் நடைபெறுவதற்கு முன்னதாக எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரும் மக்கள் மனு ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. இதனை மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சி ஏற்பாடு செய்திருந்தது.

கண்டி ஜோர்ஜ் ஆர்டி சில்வா மாவத்தையில் நடைபெற்ற கையெழுத்துக்களைச் சேகரிக்கும் திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்ஸமன் கிரியல்ல,மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

- பாக்.விஜயத்தில் தன்னை இணைக்காமைக்கு -

# சனாதிபதியிடம் விளக்கம் கோருகிறார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

இலங்கை சனாதிபதியின் பாகிஸ்தானிய விஜயத்தில் தன்னை இணைத்துக் கொள்ளாமை குறித்து வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சனாதிபதியிடம் விளக்கம் கோரியுள்ளார் பாகிஸ்தானுடன் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை தான் தயாரித்த போதிலும் அதில் தான் ஒப்பமிட அனுமதிக்கப்படாமை குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார். சனாதிபதியுடன் பாகிஸ்தானுக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் அமைச்சர் பேரியல் அஸ்ரப் ஆகியோர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பாகிஸ்தானின் வர்த்தக துறை அமைச்சரும் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கையொப்பமிட்டுள்ளார் வர்த்தக அமைச்சரானதன்னை புறக்கணித்து விட்டு வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறித்து தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ள அமைச்சர் இது குறித்து எழுத்து மூலம் சனாதிபதி தனக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். (32)

## இளவரசர்...

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் பேச்சாளரான கொலின் கிக்சும் உறுதிப்படுத்தியுள்ளார்.

## மாணவன்...

இவ்வாறான நிகழ்வு ஓர் மாணவிக்கு நடைபெற்றிருந்தால் அவளால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியுமா? எனக் கேள்வி எழுப்பினர். மாணவர்கள் இதற்கான உரிய முடிவு எடுக்கப்படாதுவிட்டால் மாணவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய சூழ்நிலை உருவாகும் எனவும் தெரிவித்தனர்.

## அம்பாறை...

காலை 9:30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் பொ.ஆதவன் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேசச் செயலகப் பிரதிநிதியும், கிராம சேவகரும், திருக்கோவில் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர், மதகுருமார்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள், பொதுமக்கள் என பெரும்பாலானோர் பங்கேற்றனர்.

இக்குடியிருப்பு கையளிப்பு நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் பொ.ஆதவன் உரையாற்றுகையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்வது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு புதிய செயற்பாடல்ல. இதுபோன்ற எவ்வளவோ வேலைத்திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எமது தாயகப் பிரதேசத்தில் மேற்கொண்டுவருகின்றது. நாம் மக்களுக்கான புனர்வாழ்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எப்போதுமே பின்னிற்கப்போவதில்லை என்று குறிப்பிட்டதுடன், இவ்வாறு ஓர் நிகழ்வின்மூலம் எமது மக்களுக்கு வீடுகளை கையளிப்படுவதையிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், அம்பாறை மாவட்டத்தினுடைய அதன் பணிப்பாளர் என்ற ரீதியிலும் தானும் பெருமைகொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது